பக்கங்கள்:-41

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 01 | வியாழக்கிழமை | 15.01.2026 | அதிர்வு 168




# யாழில் இன்று பொங்கலை கொண்டாடும் ஜனாதிபதி

## மேலும் பல நிகழ்வுகளிலும் பங்கேற்பு



(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தைப்பொங்கல் திருநாளான இன்று வியாழக்கிழமை வடக்குக்கு வருகின்றார்.

இந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இன்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டத்துக்கு வருகை தரும் அவர் கொன்னையன் குடியிருப்பு காற்றாலை மின் திட்டத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். இதைத் தொடர்ந்து, நண்பகல் 12 மணிக்கு சௌத்பார் காற்றாலை மின்சாரத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டுவார்.

07

# தேச ஒற்றுமை மிக அவசியம்

## பொங்கல் வாழ்த்தில் ஜனாதிபதி



“அண்மையில் நாம் சந்தித்த பேரிடரிலிருந்து ஒரு தேசமாக மீண்டெழும் நம்பிக்கையுடனும் அயராத முயற்சி மற்றும் உறுதியுடனும் இதுவரை இல்லாத அளவிலான பாரிய புனரமைப்பு செயற்பாட்டில் நாம் ஒன்றாகக் கைகோத்துள்ளோம். இந்த வேலைத்திட்டத்துடன் மென்மேலும் வலுவாக

06

# தமிழரின் பிரார்த்தனை நிறைவேற வேண்டும்!

## பொங்கல் வாழ்த்தில் பிரதமர்



“தைத்திருநாளைக் கொண்டாடும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரார்த்தனைகளும் நிறைவேறவும், இந்தப் புதிய பயணம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் செழிப்பையும் கொண்டுவரவும் இந்தத் திருநாளில் மனதார வாழ்த்துகின்றேன்.”

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

“உழைப்புக்கும்,

06




திருகோணமலையில் புத்தர் சிலையை அடாத்தாக – அடாவடித்தனமாக – கடற்கரையில் வைத்த பிக்குமார் மற்றும் அவர்களுக்குத் துணை போன பிற பேரினவாதிகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் நீதிமன்றம் சரியான அணுகுமுறையில் விடயங்களை கையாளத் தொடங்கி இருக்கின்றது என்று நீங்கள் நினைக்கக்கூடும்.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நான்கு பிக்குகள் உட்பட ஒன்பது பேரைத் திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ள நிலையில் இத்தகைய மனக்கருத்து உங்களில் பலருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் இந்த விளக்கமறியல் உத்தரவுக்கும் புத்தர் சிலை வைப்புக்கும் தொடர்பில்லை.

இப்போது இவர்கள் சிக்கலில் மாட்டியிருக்கும் வழக்கு கரையோரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி பௌத்த மத ரீதியான கட்டுமானங்களை கரையோரப் பகுதியில் அமைத்தமை தொடர்பானது.

சம்பந்தப்பட்ட புத்தர் சிலை நிரந்தர

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# திருகோணமலை உப்பாறில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிங்கிப் படகுகள்

## கடற்படையினர் மடக்கிப் பிடித்தனர்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

திருகோணமலை, உப்பாறு, மகாவலி கங்கையை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, மகாவலி கங்கையின் உப்பாறு பாலத்திற்கு அருகில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிங்கிப் படகுகளைக் கைப்பற்றினர்.

மகாவலி கங்கையின் உப்பாறு பாலத்திற்கு அருகிலுள்ள பகுதியில் கிழக்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கோகண்ணா நிறுவனம் நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, ஐந்து சந்தேகத்திற்கிடமான டிங்கி படகுகள் சோதனை செய்யப்பட்டன. அவை சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றமை கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் சுமார் 30 லிட்டர் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட, மணலை ஏற்றிச் சென்ற ஐந்து டிங்கிப் படகுகள் மற்றும் சட்டவிரோதமாக தயா ரிக்கப்பட்ட மதுபானங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.







# இலங்கை, இந்தியா, மாலைதீவு இணைந்து மாலேயில் கூட்டுக் கடற்படைகளின் பயிற்சி

## சுரனிமிலா கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டது

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கைக் கடற்படையைப் பிரதிநிதித் துவப்படுத்தும் இலங்கை கடற்படைக் கப்பல் சுரனிமிலா, 17 ஆவது முறையாக மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையால் ஏற்பாடு செய்யப்பட்ட டோஸ்டி XVII – 2026 கடற்படைப் பயிற்சியில் பங்கேற்காக நேற்றுப் புதன்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து மாலைதீவின் தலைநகரான மாலேவுக்குப் புறப்பட்டது.

2026 ஜனவரி 16 முதல் 19 வரை மாலைதீவின் மாலேயில் நடைபெறும் இந்தக் கடற்படைப் பயிற்சியில் இலங்கை கடற்படைக் கப்பல் சுரனிமிலா பங்கேற்பது, இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவுகளுக்கு இடையே வலுவான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான கூட்டு அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தப் படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், பிராந்திய கடற்படைகளை உள்ளடக்கிய இத்தகைய கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்பதன் மூலம், இலங்கை கடற்படை பிராந்திய கடற படைகளுடன் இணைந்து செயல்படக் கூடிய தன்மை மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துதல், கடல்சார் நடவடிக்கைகள் தொடர்பான புதிய அறிவு, திறன்கள், உத்திகள் மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளுதல், புதிய சவால்களைக் கண்டறிந்து கூட்டாக தீர்வுகளைக் கண்டறிந்து அவற்றுக்கு பதிலளித்தல் போன்ற பல நன்மைகளைப் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# நீர்கொழும்புக் கடற்பரப்பில் கடற்படையினர் 621 கிலோ பீடி இலைகளைக் கைப்பற்றினர்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

நீர்கொழும்பு கடற்பரப்பில் கடந்த திங்கட்கிழமை இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் அறுநூற்று இருபத்தொரு கிலோகிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.



மேற்கு கடற்படை கட்டளைக்குச் சொந்தமான ஒரு கப்பலால் நீர்கொழும்பு கடற்பரப்பில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, கடற்பரப்பில் கைவிடப்பட்ட பதினாறு பொதிகள் கண்காணிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் அறுநூற்று இருபத்தொரு கிலோகிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.






# மன்னாரில் பொங்கல் வியாபாரம் களையிழப்பு

(மன்னார் நிருபர்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மன்னார் நகரில் நேற்றும் முன்தினமும் வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்ற போதும் மக்கள் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. வழக்கத்தை விட இம்முறை மன்னாரில் பொங்கல் வியாபாரம் களையிழந்து காணப்பட்டது.

குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் புயல் காரணமாக மன்னார் மாவட்ட மக்கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட நிலையில் பொருளாதார ரீதியில் அவர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமையும் அவர்கள் பொங்கல் கொண்டாட்டத்தில் நாட்டம் காட்டாமைக்குக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.










# விளையாட்டு உபகரணங்கள், இசைக்கருவிகள் முல்லைத்தீவு இளைஞர்களுக்கு வழங்கிவைப்பு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களின் விளையாட்டு மற்றும் கலைத் திறமைகளை வளர்க்கும் நோக்கில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இசைக்கருவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி, விளையாட்டு மற்றும் கலாசார அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள மின்னணு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இசைக்கருவிகள் வழங்கப்பட்டன.



முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு சங்கத்திற்கு 1.5 மில்லியன் ரூபா மதிப்புள்ள உடற்கட்டமைப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 22க்கும் மேற்பட்ட விளையாட்டு, கலாசார நிறுவனங்கள் மற்றும் கலை சங்கங்களுக்கு இந்த விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகள் விநியோகம் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்விச் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) எஸ்.ஜெயக்காந்த் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டுமானமாக அங்கு அமைக்கப்பட வில்லை. ஆக, ஒரு மேசைக்கு மேல் ஒரு புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. அது இன்னமும் நிரந்தரக் கட்டுமானம் அல்ல. தேவையான போது புத்தர் சிலை யையும் தூக்கலாம். மேசையையும் நகர்த்தலாம். அது நிரந்தரமாக அங்கு நிலை நிறுத்தப்படவில்லை. ஆனால் அந்த புத்தர் சிலைக்கு மேலே நான்கு சிமெண்ட் தூண்களை நிறுத்தி, அவற்றின் மீது அஸ்பெஸ்டஸ் சீற் போட்டு ஒரு கொட் டகை அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கொட்டகையே கரையோரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி அமைக்கப்பட்ட தாக நேற்று நீதிமன்றத்தில் வழக்கின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

கரையோரப் பாதுகாப்பு அதிகார சபை அந்த கொட்டகைக்கு எதிராகத்தான் வழக்குத் தொடர்ந்திருக்கின்றது.

அனுமதியற்ற அந்தக் கொட்டகை களை அமைத்தமை தவறு என்று ஏற்றுக் கொண்டு, அவற்றை நேற்று மாலைக் குள் அகற்றுவோம் என்று உறுதிமொழி தந்தால், இந்த விடயத்தில் வழக்கை உட னடியாக முடித்துக் கொள்ள முடியும் என் பதையும், இழைத்த தவறுக்காக 25,000 ரூபா வரை அபராத தொகையோடு வழக்கை முடிக்கலாம் என்ற சமிக்ஞை யையும் நீதிமன்றம் வழக்கு விசாரணை யின் போது எதிராளிகளுக்குக் கோடி காட் டியதாகக் கூறப்படுகின்றது. ஆனால் எதிரா ளிகள் அதற்கு இணங்க விரும்பவில்லை.

அப்படியாயின் வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட வேண்டும், விசாரணையின் முடிவில் நீதிமன்றம் ஒரு முடிவுக்கு வர லாம், அதுவரை வழக்கு நீடிக்கும் என் பதை நீதிவான் எதிராளிகளுக்குச் சுட்டிக் காட்டினார்.

அது மாத்திரமல்லாமல், கரையோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் நிறுத் தப்படுபவர்களுக்கு பிணை கொடுக்கும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றுக்கு இல்லை, அதற்கு எதிராளிகள் மேல்நிலை நீதிமன்றத்திற்குத்தான் போக வேண்டும் என்பதும் நேற்றைய விசாரணையின் போது எதிராளிகளுக்குச் சுட்டிக்காட்டப் பட்டது என்று கூறப்படுகின்றது.

வழக்கில் சுமத்தப்பட்ட குற்றத்தை ஏற்றுக் கொண்டு, அமைக்கப்பட்ட கொட் டகையை அன்று மாலையே அகற்று வோம் என்று உறுதி மொழியைத் தந் தால் வழக்கை ஒரு சிறிய அபராதத்தோடு முடிவுறுத்தி, அதன் மூலம் எதிராளிகளை வழக்கில் இருந்து விடுவிக்க நீதிமன்றம் தயாராக இருந்தது. ஆனால் எதிராளிகள் இணங்காதமையால் அவர்களை விளக்க மறியலில் வைப்பதைத் தவிர வேறு எந்த வழியும் நீதிமன்றுக்கு இல்லாத நிலையில், அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் உண்மையில் நடந்தது.

இனி, புத்தர் சிலை விவகாரத்துக்கு வருவோம். மேசையில் ஒரு புத்தர் சிலையை வைத்திருப்பது நிரந்தர கட்டுமானமாகாதா என்று ஒரு சட்டத் தரணியிடம் கேட்டேன்.

"உங்கள் திருகோணமலையில் ஒரு வயது போன மூதாட்டி கடலை விற்பதற்கா கக் கடற்கரையில் ஒரு குட்டி மேசையை வைத்து, அதன் மேல் கச்சான், கடலைத் தட்டுகளை வைத்திருந்தால் அந்த மேசை வைத்தமையை நிரந்தர கட்டுமானமாகக் கருதி அந்த மூதாட்டிக்கு எதிராகக் கரை யோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க முடியுமா?" – என்று அந்தச் சட்டத்தரணி என்னிடம் திருப்பிக் கேட்டார்.

சரிதான். வெறும் மேசையில் தனித்து வைக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலையை இன்றைய நிலையில் நிரந்தர கட்டுமான மாகக் கருதி, அதன் காரணமாக கரை யோரப் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய விட யமாக அதனை அர்த்தப்படுத்த முடியாது என்பது புரிகிறது.

ஆனால், மேசையில் இருக்கும் புத்தர் நிரந்தரமாக அங்கு நிலை கொள்வதற் கான அடுத்த கட்ட நகர்வுகள் நடந்தால், நிச்சயமாக புத்தர் சிலை விவகாரத்திலும் சட்டம் பாயும் என்று நம்பலாம். புத்தர் சிலைக்கு போடப்பட்ட கொட்டகைக்காகப் பாய்ந்துள்ள சட்டம், புத்தர் சிலையை நிரந்தரமாக்கும் நகர்வு முன்னெடுக்கப் படும் போது, அதன் மீதும் பாயும் என நம்பிப் பார்த்திருக்கலாம் என நினைக் கிறேன்.

## தேச ஒற்றுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைகோக்க முன்வருமாறு இந்தத் தைப்பொங்கல் திருநாளில் நான் அனை வரிடமும் மீண்டும் கேட்டுக்கொள்கின் றேன்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள் ளவை வருமாறு:–

"உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர் களால் மிகுந்த பக்தியுடனும் உற்சாகத்து டனும் இன்று தைப்பொங்கல் தினம் கொண்டாடப்படுகின்றது.

வெற்றிகரமான விளைச்சலுக்கு உத விய சூரியக் கடவுளுக்கும் கால்நடைகளுக் கும் இயற்கை அன்னைக்கும் நன்றி உணர்வை எடுத்தியம்பும் கொண்டாட்ட மாக தைப்பொங்கல் தினம் அமைகின் றது.

செழிப்புமற்றும்நன்றியுணர்வைஅடை யாளப்படுத்தும் தைப்பொங்கல் பண் டிகை, சிறந்த விளைச்சலுக்கு நன்றி பாராட் டும் ஒரு நிகழ்வு மாத்திரமன்றி, எதிர் காலத்தில் தைரியத்துடனும் நம்பிக்கை யுடனும் ஒரு புதிய பயணத்தைத் தொடங் குவதற்கான அழைப்பாகவும் அமைகின் றது.

அண்மையில் நாம் சந்தித்த மிகப் பெரும் இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து, ஒரு தேசமாக மீண்டெழும் நம் பிக்கையுடனும் அயராத முயற்சி மற்றும் உறுதியுடனும் இதுவரை இல்லாத அளவி லான பாரிய புனரமைப்பு செயற்பாட் டில் நாம் ஒன்றாக கைகோத்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்துடன் மென்மேலும் வலுவாக கைகோக்க முன்வருமாறு சுபீட்ச மான எதிர்பார்ப்புடன் இந்தத் தைப்பொங் கல் திருநாளில் நான் அனைவரிடமும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இயற்கையுடன் நெருக்கமாக இருக்க வேண்டிய அவசியம் முன்னெப் போதையும் விட அதிகமாக உணரப்படும் இந்த நேரத்தில், இயற்கையுடன் ஆழ மாக இணைக்கப்பட்ட தைப்பொங்கல் பண் டிகை நமது வாழ்க்கைக்கும் சமூகத்துக் கும் உயர்வான அர்த்தத்தைச் சேர்க்கின் றது என்பதை நினைவூட்ட விரும்புகின் றேன்.

எந்தவொரு இருளுக்கும் பிறகு ஒளி பிறக்கும் என்று நாம் உறுதியாக நம்புகின் றோம். உறுதியுடனும் ஒற்றுமையுடனும் சவால்களைவென்று"வளமானநாடு–அழ கான வாழ்க்கையை" கட்டியெழுப்புவதற் கான பயணத்துக்கு இவ்வருட தைப் பொங் கல் பண்டிகை சிறந்த ஆசிர்வாதமாக அமைய பிரார்த்திக்கின்றேன்.

இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ளஅனைத்துதமிழ்மக்களுக்குமகிழ்ச் சியான தைப்பொங்கல் தின வாழ்த் துகள்!." – என்றுள்ளது.

## தமிழரின் பிரார்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இயற்கைக்கும் நன்றி செலுத்தும் உன்னத பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலக வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மனித வாழ்வியலானது இயற்கை யோடு எத்துணை பின்னிப் பிணைந் துள்ளது என்பதை இந்தத் திருநாள் உலகுக்கு எடுத்துரைக்கின்றது.

நாம் அனைவரும் இயற்கையின் படைப்புக்களே. இயற்கையை மீறி எம்மால் எந்தவொரு பயணத்தையும் மேற்கொள்ள முடியாது. இயற்கையி னால் எமக்குக் கிடைக்கப்பெற்ற ஆசீர் வாதங்களுக்குக் கைமாறு செய்வது மிக உயர்ந்த மனிதப் பண்பாகும்.

நாடு என்ற ரீதியில் நாம் இன்று ஒரு தீர்க்கமான மாற்றத்தின் விளிம்பில் நிற்கின்றோம். கொள்கை மற்றும் கட்ட மைப்பு ரீதியிலான மாற்றங்கள் ஊடாக, மனப்பாங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தி, தேசத்தை ஒரு

"மறுமலர்ச்சி யுகத்தை" நோக்கி இட் டுச் செல்லும் பாரிய பொறுப்பு எம் அனை வருக்கும் உள்ளது. சவால்கள் நிறைந் ததாக இருப்பினும், ஒரு அரசாங்கமாக நாம் அந்தப் பொறுப்பை ஏற்று, தேசத் தின் பரிணாம வளர்ச்சிக்கான புதிய வருடத்தை உறுதியுடன் ஆரம்பித்துள் ளோம்.

விவசாயி சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும். அதேபோல், நாட்டின் சுபீட்சத்துக் காக நாம் மேற்கொள்ளும் இந்த அர்ப் பணிப்பான பயணமும் ஒரு நற்பயிரை வளர்ப்பது போன்றதே. இந்தத் தருணத் தில், இயற்கையைப் போற்றி நன்றி செலுத்தும் தைப்பொங்கல் பண்டிகை, வளமான கலாச்சார விழுமியங்களைக் கொண்ட பிரஜைகளை உருவாக்க எமக்கு வழிகாட்டுகின்றது.

ஒருவரையொருவர் மதித்தல், பிற மத மற்றும் கலாச்சார உரிமைகளைப் பேணு தல் போன்ற உயரிய பண்புகளுடன், நல்லிணக்கம் மிக்க ஒரு புதிய இலங்கை யைக் கட்டியெழுப்புவதற்கு இந்தத் தைப்பொங்கல் திருநாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி பூணுவோம்.

தைத்திருநாளைக் கொண்டாடும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரார்த் தனைகளும் நிறைவேறவும், இந்தப் புதிய பயணம் அனைவருக்கும் மகிழ்ச் சியையும் செழிப்பையும் கொண்டுவரவும் இந்தத் திருநாளில் மனதார வாழ்த்துகின் றேன்." – என்றுள்ளது.

# அமைச்சர் லால்காந்தின் கருத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம்

## மகா சங்கத்தினரிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் வலியுறுத்து

மகா சங்கத்தினரை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கே.டி. லால்காந்த, உடனடியாக மன்னிப்பு கோர வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களிடம் கூறியதாவது:-

"மிகிந்தலை தலைமை விகாராதிபதி மீது தரக்குறைவான வார்த்தைகளை பயன்படுத்தி அமைச்சர் லால்காந்த விமர்சித்துள்ளார். கல்வி மறுசீரமைப்பை பற்றி மிகிந்தலை தேரருக்கு கருத்து வெளியிடும் சுதந்திரம் உள்ளது. எனினும், மகா சங்கத்தினரைப் படுமோசமாக விமர்சிப்பது என்பது உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தனது கருத்தை மீளப்பெற வேண்டும். மிகிந்தலை தேரர் உட்பட மகா சங்கத்தினரிடம் அமைச்சர் லால்காந்த மன்னிப்பு கோர வேண்டும்." – என்றார்.

அதேவேளை, இந்த விவகாரத்துக்கு எதிராக அரசியல் களத்தில் எதிர்ப்பு வலுத்



துள்ளது. சில பௌத்த தேரர்களும் அமைச்சர் லால்காந்தவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

# புத்தளம் விபத்தில் இருவர் உயிரிழப்பு

## மேலும் இருவர் படுகாயம்

(க.மகாதேவன்)

புத்தளம், அட்டவில்லு பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் இருவரும் சிகிச்சைக்காக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றைய நபர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

மேலும், படுகாயமடைந்த பின்னால் அமர்ந்து பயணித்தவர்கள் இருவரும் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 13 நாள்களில் விபத்துகளில் 82 பேர் பரிதாப உயிரிழப்பு!

## வீதி பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

நடப்பு ஆண்டின் முதல் 13 நாள்களில் மாத்திரம் விபத்துகளில் 82 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. ஜி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

இந்த ஆண்டின் முதல் 13 நாட்களில் மட்டும் 77 பெரும் விபத்துகள் பதிவாகியுள்ளன. இவற்றில் 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெற்ற விபத்துகளில் பெரும்பாலானவை மதுபோதையில் வாகனம்செலுத்தியமையால்ஏற்பட்டவையாகும்.

இதனிடையே, இந்தக் காலப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக 7 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை பரிசோதிக்க 75 ஆயிரம் கருவிகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

மதுவைத் தவிர ஏனைய போதைப் பொருள்களைப் பயன்படுத்தி வாகனம் செலுத்துபவர்களைக் கண்டறியும் முன்னோடித் திட்டம் தற்போது கொழும்பு பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது." – என்றார்.

# யாழில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் பிற்பகல் 2 மணியளவில் வேலணை ஐயனார் கோயில் முன்றலில் நடைபெறும் தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பார்.

பின்னர், பிற்பகல் 4 மணியளவில் மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் வளாகத்தில் வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திசபையால்நடத்தப்படும்பொங்கல் விழாவிலும் அவர் பங்கேற்பார்.

நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தையும் ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்.

இதன்போது, பயனாளர்களுக்கு நிவாரண நிதி காசோலைகளை அவர் வழங்கி வைப்பார்.

பின்னர், நாளை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள போதைப்பொருளுக்கு எதிரான "முழு நாடும் ஒன்றாக" தேசிய கருத்திட்ட நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்று சிறப்புரை ஆற்றுவார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விடிவுப் பொங்கல் எப்போது?

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதனால் அவர்களது பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் கூட இயற்கையோடு இயைந்தனவாகவே இருக்கின்றன. இன்று தமிழர்கள் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் கூட இயற்கையோடு இயைந்து அவர்கள் கொண்டாடும் தனிச்சிறப்பு மிக்க பண்டிகைதான்.

அதனால் இது தமிழரின் தேசியப் பண்டிகை நாள்.

உலகின் நாயகன் சூரியன். அவனே சக்தியின் மூலம். அவன் இன்றி அணுவும் அசையாது. ஒளி வடிவான அவனின் சக்தி மூலத்தை மண்ணுலகில் பதிப்பவை தாவரங்கள். சூரியனுக்கும் உணவைத் தரும் தாவரங்களுக்கும் அதற்கு வழி செய்யும் ஏனைய தரப்புகளுக்கும் நன்றி தெரிவிக்க தமிழன் தேர்வு செய்த பண்டிகைதான் தைப்பொங்கல்.

உழைக்கும் தமிழ் மக்கள் அந்த உழைப்புக்கான பயனைத் தரும் சூரியனுக்கும் நெல்லுக்கும் மரியாதை செய்யும் உயரிய பண்டிகைத் திருநாளாகத் தைப்பொங்கல் தினம் அமைகிறது.

அதனால் இது உழவர் திருநாள், தமிழர் திருநாள், தைப்பொங்கல், அறுவடைத்திருநாள் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது.

தமிழர்களின் தேசிய விழாவான தைப்பொங்கல் மதங்களைக் கடந்து கொண்டாடும் மாண்புமிக்க ஒரு திருநாளாகும்.

தைத் திருநாள் தமிழ்மக்களின் பண்பாட்டு விழுமியங்களையும், பாரம்பரிய சம்பிரதாயங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் ஒரு பண்டிகை. தமிழ்மக்களின் பண்பாட்டின் செழுமைக்கு உறுதுணையான திருநாள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நன்நாள்.


சூரியனுக்கும் நெல்லை வாரி இறைக்கும் வயலுக்கு மாத்திரம் அல்லாமல் தனக்கு இப்பணியில் உதவும் கோமாதாவுக்கும் நன்றி செலுத்த தைப்பொங்கலுக்கு அடுத்த நாளை மாட்டுப்பொங்கலாகத் தமிழன் கொண்டாடுகிறான்.

சூரியன் தனுராசியிலிருந்து மகர ராசிக்கு நுழைவதன் மூலம் உத்தராயணத்தில் சஞ்சரிக்கின்றான். அந்த சஞ்சரிப்புக் காலம் தொடங்கும் முதல் நாளை மகர சங்கராந்தி என்று அழைப்பர். அந்த நாளில்தான் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது தமிழர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையோடு ஈழத் தமிழர்கள் நீண்ட காலம் காத்திருந்து ஏமாந்து இருக்கிறார்கள் என்பது தான் நமது அவல நிலைமை. இந்தத் பொங்கலுக்குத் தீர்வு, அடுத்த தீபாவளிக்கு தீர்வு, வரும் புது வருடத்தில் தீர்வு என்று தமிழர்கள் காத்திருந்த ஒரு காலம் இருந்தது. அதுவும் கூட மலையேறி விட்டது. இப்போதும் கூட அவர்கள் இந்தத் தைப்பொங்கலோடாவது வழி பிறக்காதா என்று நப்பாசையோடு காத்திருக்கிறார்கள்.

ஆனால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர்களுக்கு விடிவுப் பொங்கல் வருவதாக இல்லை. அதற்காக அவர்கள் தொடர்ந்து ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள்.



# பொங்கலும் புத்தெழுச்சியும்



மிருணாளினி நடராஜன்

தமிழர்களின் நற்பண்புகளான விருந்தோம்பல், நன்றி கூறுதல், எல்லோருக்கும் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புகளை பிரதிபலிக்கும் ஒரு உன்னத திருநாளாகப் பொங்கல் அமைகின்றது.

சூரிய பகவான் ஒரு வருடத்தின் கால நிலையை வரையறுத்து மழை வீழ்ச்சியையும், பயிர்கள் வளர்வதற்கு தேவையான சாதகமான கால நிலையையும் ஏற்படுத்தி கொடுப்பதால் உலகில் மானிடர்கள் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு ஓர் உயிர் கொடுக்கும் சக்தியாக இருந்து வருகிறார்.

உலகில் வாழ்ந்து கெண்டிருக்கும் மானிடப் பிறவிகளான நாம் சூரிய பகவானை துதித்து வழிபடவேண்டிய நிலையில் இருக்கின்றோம். சூரிய பகவானின் அனுக்கிரகத்தால்தான் உலகில் பயிர்கள் செழித்து வளர்ந்து எமக்குத் தேவையான உணவை பெற்றுக் கொடுக்கின்றன.

நதிகளில் இருந்தும், நீர்த்தேக்கங்களில் இருந்தும் நீரைப் பயன்படுத்திய விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் விளைச்சல் நிலங்களை பொன் விளையும் பூமிகளாக மாற்றுகின்றார்கள்.

நாற்சதுரமாக நாற்புறமும் வாசல் வைத்து கோலம் போட்டு குறிக்கப்பட்ட இடத்தை புனித இடமாக மதிப்பார்கள். கோலம் போடப்பெற்ற இடத்தை நான்கு கம்புகள் நட்டு அதில் நூல் கட்டி தோரணம், மாவிலை தொங்க விடுவார்கள். கோலமிட்டு புனிதமாக்கிய இடத்தின் நடுவில் புதிதாக மண்ணால் பிடித்து வைத்த மூன்று அடுப்பு கட்டிகளையும் வைத்து பொங்கல் பானை வைப்பதற்கு அடுப்பைத் தயார்படுத்துவார்கள். சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்கு முன் வீட்டின் சுவாமி அறையில் தீபம் ஏற்றி வணங்கியபின் சூரியப் பொங்கலை ஆரம்பிப்பார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தோத்திரங்கள் பாடி நிற்க சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, தேங்காய் உடைத்து வைத்து, தூபம், தீபம் காட்டி விநாயகரை வழி

தொடர்ச்சி ▼

## தைத்திருநாள் சிறப்பிதழ்



# பொங்கலும் புத்தெழுச்சியும்

தொடர்ச்சி ▲

பெற்றபின், அடுப்பில் நெருப்பு மூட்டி, புதுப்பானையின் கழுத்தில் மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலைகளைக் கட்டி விபூதி இட்டு, திலகமிட்டு புனிதமாக்கி அதனுள் நீரும் பசுப்பாலும் விட்டு அடுப்பில் பொங்க வைப்பார்கள்.

பால் பொங்கி எழுந்து வழியும்வரை நெருப்பைக் கூட எரிய விடுவார்கள். பால் பொங்கி வழியும்போது கடவுளை வணங்கி “பொங்கலோ பொங்கல்” என ஆரவாரித்து புது அரிசியை வீட்டுத் தலைவர் அல்லது ஆண்மகன் இரு கைகளாலும் கிள்ளி மூன்று முறை (வலஞ்சுளியாக) பானையைச் சுற்றி பானையில் இட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

அப்போது சக்கரைப் பொங்கலாயின் பயிற்றம் பருப்பு, சக்கரை, கஜு/, ஏலக்காய் முதலியவற்றை போட்டு பொங்கல் செய்வார்கள். பொதுவாகத் தைப்பொங்கலின்போது சக்கரைப் பொங்கலே பொங்குவது வழக்கம். ஆனால் சிலர் வெண்புக்கையும் சாம்பாரும் (கறியும்) வைப்பார்கள். சிறுவர்கள் பட்டாஸ் கொழுத்தி, மகிழ்ச்சியோடு ஆடிப் பாடுவர்.

பால் பொங்கி அரிசி போட்டபின் பானையில் இருக்கும் மிதமிஞ்சிய நீரை ஒரு சுத்தமான பாத்திரத்தில் எடுத்து அதனை பூஜைகள் முடியும் வரை வைத்திருந்து அதனை மாவிலை கொண்டு வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் படும் படியாக தெளிப்பார்கள். அந் நீரில் சூரியனின் சக்தி இருப்பதால் சூரிய பகவானின் சக்தி எல்லா இடங்களிலும் பட்டு பிரகாசிக்கும் (தோஷங்கள் நீங்கும்) என்பது அவர்களின் நம்பிக்கை.

வேளாண்மைக்கு வேண்டிய மழை நீரையும், சூரிய ஒளியையும் (வெய்யிலையும்), காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி தம்மையும், நாட்டையும் செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வழிமண்டலம், நீர் நிலைகள் போன்றவற்றுக்கும்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழவர்களால் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

தற்பொழுது பொங்கல் விழாவானது முன்போல் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், கல்விக் கூடங்கள், தொழில் நிலையங்களிலும், இந்துக்கள் அல்லாத தமிழ் மக்களாலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதால் தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்று சிறப்படைகின்றது.

தைப்பொங்கல் பண்டிகையின் போது உழவர்கள்தாம் அறுவடை செய்த “புதிரை” (நெற்கதிர்களை) அரிசியாக்கி அதில் பொங்கல் செய்து கொண்டாட, பல்வேறு தொழில் புரிவோர் உழவர்களுடன் பண்டமாற்றுச் செய்து புதிய அரிசியை வாங்கி பொங்கல் செய்து கொண்டாடுகின்றார்கள்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் அதிகமாக வாழும் கனடாவில் உள்ள மிகப்பெரிய “மார்க்கம்” மாநகர சபை ஒவ்வொரு வருடத்திலும் வரும் ஜனவரி 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளைத் தமிழர்களின் பாரம்பரிய நாள்களாகவும், தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகவும் அங்கீகரித்துள்ளது. தை மாதத்தை தமிழர்களின் புனித மாதமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் கனடாவில் ஒரு தமிழர் பண்டிகையையும் அதனோடு தொடர்புடைய மாதத்தினையும் அதிகார பூர்வமாக அங்கீகரித்த முதல் வெளிநாட்டு மாநகர சபை என்ற பெருமையை மேற்படி ”மார்க்கம் நகர சபை” பெற்றுள்ளது.

உழவர்கள் மார்கழி மாதத்தில் (தைப்பொங்கலுக்கு முன்) ஒரு நல்ல நாள் பார்த்து “புதிர் எடுத்தல்” நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் காலையில் குளித்து கடவுளை வணங்கி வயலுக்குச் சென்று வயல் வரம்பில் முதற்கடவுளான பிள்ளையாரை வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைப் படைத்துத் தேங்காய் உடைத்து விநாயகரையும், குலதெய்வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டு செல்வார். இதேநேரம் குடும்பத்தலைவி தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, மெழுகி புதிர் வாங்குவதற்கு தயாராக இருப்பார்.

தலைவன் கொண்டு வருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி சாமியறைக்கு கொண்டு செல்லும் வழக்கம் உண்டு. அதன்பின்னர் கடவுளை வணங்கி புதிய நெற்கதிர்களை சாமியறை மற்றும் சமையல் அறைகளில் கட்டித் தொங்கவிடுவார்கள்.

மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைப் பொங்கலுக்காக வைத்திருப்பார்கள். கடின உழைபின் மூலம் கிடைக்கப்பெற்ற நெற்கதிர்களை நல்ல நாளில் “புதிர்” எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் அவர்களுக்கு சாப்பாட்டுக்குக் குறைவிருக்காது என்பது அவர்களுடைய நம்பிக்கையாகும்.

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம்வீட்டுப் பொங்கல் படையல் சூரியன் உதிக்கும் போதே முதல் நல்விருந்தாக அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். எல்லோரும் அதிகாலையில் தோய்ந்து (முழுகி), வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவினால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள். முற்றம் சிமந்தால் ஆனதாயின் அதனைச் சுத்தம் செய்து கழுவி கோலம் போடுவார்கள். அத்துடன் வீட்டு வாசலில் (கதவு நிலையில்) மாவிலை கட்டி சூரிய பகவானை வரவேற்க தயாராக இருப்பார்கள்.

புதுமனை, புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை “தலைப் பொங்கல்” என வெகு சிறப்பாக கொண்டாடுவார்கள்.



SV MEDIA
a one
media network
அனைவருக்கும்
இனிய தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்
tamil one TV HD
முரசு
வணக்கம்
V தமிழ்
Ceylon
MURASU
VTV HD




Ruhbins Hospital (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94 77 248 6642

# தைத்திருநாள் சிறப்பிதழ்





# தை மகள் மலர்ந்தாள்!

வா!
தைப் பெண்ணே!
உன் பாதங்கள் சிதையாமல்
பார்த்து நடந்து வா...!

நீ வரும்போதெல்லாம்
பூமியே தன்னைப்
புதுப்பித்துக் கொள்ளுமே!

காற்றின் கைக்குழந்தையாய்
நாகரீகத் தென்றல்
நடந்து வருமே!

வாசலில் கோலம் இட்டு
கதிரவனைக் காண
மகிழ்ச்சி கொள்ளும் நாள்
மலர்ந்து வரட்டும்!

காலை வேளையில்
பூமியை அள்ளிக் கொள்ள
கதிரவனே கண் மலர்ந்து
எழுந்து வா...!

விவசாயி வியர்வை சிந்தி
முத்துமணி ரத்தினம் போல்
மணி மணியாய் பெற்றெடுத்த
புது நெல்மணிகள்...!

பட்டாசு முட்டாசு
கொழுத்திக் கொண்டாடும்
சின்னஞ் சிறுசுகள்
குதூகளிப்பில் நெஞ்சம்
மகிழ்ச்சியே!

மலரும் தையிலே
மனமகிழ்ந்து கொண்டாட
சொந்த பந்தம் அயலவரும் – தையை
இனிதாய் வரவேற்போம்!

**-‘கலாதினி’ உடப்பூர் மகாதேவன்.**

# புயலுக்குப் பின்னால் படைத்தவன் பகலவனுக்கு சொன்ன பதில்...?

இலங்கையில் இயற்கையாள் சன்னதங் கொண்டு
சலங்கைகள் கட்டி ஆடிய தாண்டவம்
ஆண்டவன் தான்தானாம் அதற்கு நட்டுவாங்கம்
இனிமேலும் திருந்தாது இயற்கையைச் சீண்டினால்
இப்படித்தான் அடிக்கடி இறைவன் நொட்டுவானாம்

காடுகளை அழித்து மேடுகளைக் குடைந்து
மண்ணை அகழ்ந்து விண்ணில் துளையிட்டு
ஓசோனை மெலிதாக்கி மோசமாக ஆய்வுசெய்து
கண்டபடி எரித்து கரிவாயுவைச் செறிவாக்கி

பாரெங்கும் போர்மேகம் யாரிங்கு பெரியரென
யாரிகட்டி அணுகுண்டை வாரிக்கொட்டி கரிகந்தகவாயு
தொழிற்சாலைக் கழிவோடு தொல்லைதரும் வாகனப்புகை
இரசாயன உள்ளீடு இரண்டறத் தலையீடு

இடர்தரும் பிளாத்திக்கு பலதிக்கில் பயன்பாடு
இவையாவும் இயற்கையை வதஞ்செய்ய வதம்செய்ய
இதமில்லாப் பதம் கண்டாள் வளியன்னை அறிவாயோ?
பாரமான வாயுக்களும் பச்சைவீட்டு விளைவுதர

பூகோளம் கோலங்கெட்டு பாழும்வெப்பம் மீறிவிடும்
பனிமலைகள் உருகிவிட பசுந்தரைகளும் மூழ்கிவிடும்
காலநிலை மாற்றமிது காலனுக்கும் வாய்ப்பாச்சு
மானிடர் செய்த இடர்களிவை மன்னிக்க முடியாத தப்பாச்சு

இயற்கையாள் இதனால்தான் இலங்கையிலும் சன்னதம்
இயற்கையைப் பேணிநின்றால் இனிமேல் வாழ்வும் உன்னதம்
பதில் சொன்னான் இறைவன் பகலவன் கேட்ட கேள்விக்கு
படைத்தவனும் ஆயத்தம் செய்தான் பரிகார வேள்விக்கு.

**- மகேசன் கஜேந்திரன்.**

AKSYA'S FASHION

தை பிறந்தது
அனைவருக்கும் வழிபிறக்க

# தைத்திருநாள்
# நல்வாழ்த்துகள்



# தைத்திருநாள் சிறப்பிதழ்





# இயற்கைக்கு நன்றி சொல்லும் பண்பாட்டுத் திருநாள்தான் தைப் பொங்கல்...!



வித்தகர் விபுலமாமணி
விரி.சகாதேவராஜா,
காரைதீவு நிருபர்

உலகில் தமிழர் சமூகத்தின் முக்கிய விழாக்களில் ஒன்றாக தைத் திருவிழா அல்லது தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

தை மாதத்தின் முதல் நாளில் நடைபெறும் இந்தப் பண்டிகை, தமிழர் வாழ்வில் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர் சமூகத்திலும் மிக முக்கியமான விழாவாக கொண்டாடப்படும் ஒன்று.

இது இயற்கையின் பெருமையை, விவசாயத்தின் மகத்துவத்தை மற்றும் குடும்ப, சமூக உறவுகளின் அமைதியை உணர்த்தும் ஒரு பண்பாட்டு விழா ஆகும்.

விவசாய நன்மை மற்றும் நன்றி என்பவற்றை மக்களிடம் கொண்டு வரும் ஒரு சிறப்பான விழாவாகும்.

பொங்கல் பண்டிகையின் முக்கியத்துவம் என்பது சூரிய தேவனை மரியாதை செய்யும் திருவிழாவாகும். இயற்கைக்கு நன்றி சொல்லும் நாள் இது.

2026 ஜனவரி 15 வியாழக்கிழமை தைப்பொங்கல் திருநாள் காலை 8 முதல் 9 மணி வரை சூரிய ஓரை என்பதால், இந்த நேரத்தில் சூரிய பகவானுக்கு பொங்கல் வைத்து வழிபடுவது மகத்தான பலனை தரும். 9 முதல் 10 மணி வரை சுக்கிர ஓரை, இந்த நேரத்தில் பூஜை செய்தால் குடும்ப சாந்தி, செல்வ வளம் அதிகரிக்கும். இந்த இரண்டு நேரங்களையும் தவறினால், காலை 10.30 முதல் 11.30 மணி வரை பொங்கல் வைத்து வழிபடலாம். பக்தியுடன் செய்த வழிபாடு வருடம் முழுவதும் நன்மையும், சந்தோஷமும் தரும் என்று சித்தர்கள் குரல் தெரிவிக்கிறது.

இந்நாளில் “பொங்கல்” எனும் உணவு தயார் செய்யப்படுகிறது. இது அரிசி பயறு மற்றும் பால் சேர்த்து செய்கின்ற நிறைவான சுவையுள்ள உணவு ஆகும்.

தமிழ் சமூகத்தில் தைப் பொங்கல் நாளில், குடும்பத்தினர் சேர்ந்து வீட்டின் முன் மண் பரப்பில் கலந்துகொண்டு பொங்கல் சமைத்து, பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்துவார்கள்.

அதேபோல் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுவதால், ஆன்மீக மகிழ்ச்சியும் பெருகும். குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுகளில் கலந்துகொண்டு மகிழ்வர்.

இலங்கையில் தமிழ் மக்கள் தைத் திருவிழாவை மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடுவர். குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும், மலையகத்திலும் குடும்பங்கள் செழித்து மண்டபங்களில் சேர்ந்து பொங்கல் உணவை பகிர்வதும், நெறியனுபவங்களை பரிமாறிக்கொள்வதும் வழக்கமாக உள்ளது.

இது குடும்ப ஒன்றுமை மற்றும் சமூக ஒற்றுமை என்ற ஆன்மீகத்தை வளர்க்கும் முக்கிய காரணியாகும்.

தைப் பொங்கல் என்பது மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் சிறப்பான சின்னமாகும். இது நமக்கு இயற்கைக்கு நன்றி சொல்லும், குடும்பங்களோடு சந்தோஷத்தை பகிரும், சமூகத்தின் ஒற்றுமையை வளர்க்கும் ஒரு அற்புத வாய்ப்பு அளிக்கிறது.

இந்தஆண்டுதைத்திருவிழாஒவ்வொருவருக்கும் சந்தோஷம், வளம் மற்றும் நற்பணி நிறைந்ததாக அமைய வாழ்த்துகள்.

தைப்பொங்கல் பண்டிகை நான்கு நாள்கள் கொண்டாடப்படுகிறது.

போகி – பழையதை அகற்றி, புதியதை வரவேற்கும் நாள். வீடுகளைச் சுத்தம் செய்து, போகி தீ மூட்டல்.

தைப்பொங்கல் (சூரிய பொங்கல்) – சூரிய பகவானுக்கு நன்றி கூறும் முக்கிய நாள். புதுப் பானையில் பொங்கல் வைத்து வழிபாடு.

மாட்டுப் பொங்கல் – விவசாயத்துக்கு உதவும் மாடுகளுக்கு மரியாதை செய்து மாடுகளை அலங்கரித்து பூஜை செய்வது.

காணும் பொங்கல் – உறவினர்கள், நண்பர்கள் சந்திக்கும் நாள். வெளியே சென்று மகிழ்ச்சி பகிரும் நாள்.

தைப்பொங்கல் விழா குடும்பத்தையும், சமூகத்தையும் ஒன்றிணைக்கும் சக்தியுடையது. வீட்டின் சமையலறை, நெறிமுறைகள், பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் இணைத்து அனைவருக்கும் மகிழ்ச்சி தருகிறது. இதனால் தந்தை, தாய், பிள்ளைகள் மற்றும் பெரியோர் அனைவரும் ஒரு குடும்பமாக சேர்ந்து திருவிழாவை கொண்டாடுவார்கள்.

இத்தகைய திருவிழா நம் பாரம்பரிய பண்பாடு, விவசாய வாழ்வு, இயற்கையுடன் இணைந்து வாழ்வது என்பதில் சிறந்த படிப்பினையை வழங்குகிறது. தைப்பொங்கல் நமது முன்னோர்களின் வாழ்வின் மகத்தையும், தமிழ் பண்பாட்டின் அழகையும், சமூக உறவுகளின் வலிமையையும் சுட்டிக்காட்டுகிறது.

முடிவாக, தைப்பொங்கல் மக்களுக்கு நல்வாழ்க்கை, உழைப்பின் மதிப்பு மற்றும் சமூக ஒற்றுமையை உணர்த்தும் ஒரு ஆன்மிகப் பெருமை கொண்ட திருவிழாவாகும். இது வாழ்வின் சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ளும், நமது பாரம்பரியத்தின் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தும் ஒரு பொதுப் பண்டிகையாகும்.

அத்தகைய பண்டிகையை உரிய சம்பிரதாய முறைப்படி கொண்டாடி மகிழ்வோம்.


NAM THAYAGAM
நம் தாயகம் INC
அனைவருக்கும்
இனிய தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்

# தைத்திருநாள் சிறப்பிதழ்





# மங்கலமாய் மலருவதே பொங்கல் திருநாளே...!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

பொங்கலை நோக்கி நிற்கின்றார் யாவரும்
காத்திருப்பார் கவலை போக்கிடட்டும் பொங்கல்
களிப்புப் பெருகட்டும் கண்ணீர் மறையட்டும்
கலகலப்பாய் யாவருமே பொங்கியே மகிழட்டும்

நாளும் பொழுதும் நாடிவரும் துன்பம்
நமையண்ட விடாமல் நாமிறையை வேண்டிடுவோம்
பொங்கலைப் பொங்கிப் போக்கிடுவோம் அனைத்தையும்
மங்கலமாய் பொங்கி மகிழ்ந்திடுவோம் வாருங்கள்

பொங்கலை நினைத்தால் புத்துணர்வு பெருக்கெடுக்கும்
புத்தாடை மத்தாப்பு நினைப்பிலே வந்தமரும்
பச்சரிசி சர்க்கரை பாலோடு கரும்பும்
பருப்போடு தேனும் பதிந்திடுமே மனமெங்கும்

காலையிலை நீராடி கோலமிட்டு வாசலிலே
கும்பமும் வைத்து குத்துவிளக் கேற்றிடுவோம்
அடுப்பினை மூட்டி ஆண்டவனைக் கும்பிட்டு
பொங்கற் பானையினை பக்குவமாய் வைத்திடுவோம்

அம்மா இருப்பார் அப்பாவும் இருப்பார்
அன்பான பாட்டியும் தாத்தாவும் இருப்பார்
அக்காவும் தங்கையும் அருகிலே இருக்க
அடுப்பிலே பொங்கல் பொங்கியே வழியும்

பொங்கிய பொங்கலை கதிரவனுக்குப் படைத்து
கையெடுத்துக் கும்பிட்டு கண்மூடி நின்று
எங்களின் கவலைகள் இல்லாது போக
இன்னருளைச் சுரந்திடுவாய் எனவேண்டி நிற்போம்

ஆலயம் செல்வோம் அர்ச்சனை செய்வோம்
அனைவருக்கும் நல்வாழ்த்தை அளித்துமே நிற்போம்
மூத்தோரை வணங்குவோம் முழுவாசி பெற்றிடுவோம்
பொங்கிய பொங்கலை பங்கிட்டு மகிழ்வோம்

ஊரெல்லாம் உல்லாசம் பொங்கியே நிற்கும்
உறவினர்கள் வீடெல்லாம் உளமகிழச் செல்வர்
பொங்கலெனும் உணர்வு பூரிப்பைக் கொடுக்கும்
பூப்போல மத்தாப்பாய் கலகலப்பு விரியும்

எங்குமே கொண்டாட்டம் நிறைந்துமே இருக்கும்
எழிலாகப் பாட்டரங்கம் பட்டிமன்றம் நடக்கும்
மங்கையரும் வாலிபரும் மனமகிழக் கலப்பார்
எங்குமே ஆனந்தம் பொங்கியே வழியும்

உழவரது திருநாளாய் அமைந்ததுவே பொங்கல்
உழவினது மகத்துவத்தை உணர்த்துவதே பொங்கல்
உழைக்கின்ற உழைப்பினை உயர்த்துவதே பொங்கல்
உழைக்கின்றார் வாழ்வுயர அமையட்டும் பொங்கல்

தமிழரது திருநாளாய் மலர்கிறதே பொங்கல்
சமயத்தைக் கடந்து உயர்கிறதே பொங்கல்
பொங்கலெனும் வார்த்தையிலே  பூரிப்பே இருக்கு
மங்கலமாய் மலருவதே பொங்கல் திருநாளே!


Gunaams
Super Market
வாடிக்கையாளர்கள்,
நலன்விரும்பிகள்
அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல்
நல்வாழ்த்துகள்
1145 Morningside Ave unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்!



தமிழ் மக்களின் வாழ்வில் அறுவடைப் பண்டிகை விழாவாக தைப்பொங்கல் திருநாள் காணப்படுகிறது. அனைவரும் மகிழ்ச்சியுடன் தை மகளை வரவேற்று மகிழ்ந்து, உறவுகளுடன் கூடி மகிழும், நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் சிறப்பு வாய்ந்த நல்நாளாகும்.

இலங்கை மணித்திருநாடு பல்வேறு இன, பல்சமூக, சமய அமைப்பைக் கொண்ட நாடாகும். நாம் ஒவ்வொருவரும் ஏனையவர்களுடைய சமூக, சமய, கலாசார விழுமியங்களையும் தொன்மையையும் அவர்கள் கடைப்பிடித்து முறைமைகளையும் புரிந்து கொண்டு வாழவேண்டும்.

இந்தச் சமயத்தில் தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளையும், வழிபாட்டு சுதந்திர மறுப்பு, பூர்வீக பூமி ஆக்கிரமிப்பு என பல துறைகளில் பாதிப்பை சந்தித்து மன உளைச்சல், மனவேதனையுடன் வாழும் சூழலில் இருக்கின்றார்கள். இவையெல்லாம் நீங்க வேண்டும் எனும் இறை பிரார்த்தனைக்கு அப்பால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் ஒற்றுமையுடன், ஆக்கபூர்வமான, உணர்வுபூர்வமாக செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் உங்கள் தனித்துவம் பேணி, மக்கள் தேவைகளை பூர்த்தி செய்ய ஒன்றுபட்டு ஒரேவிதமான செயற்பாட்டையும் புரிந்து இணைந்து செயல்பட வேண்டும். ளிப்படைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். இவை காணப்படாததும் எமது உரிமைகளை உரியவர்கள் வழங்காமல் தாமதிப்பதற்குக் காரணமாகும்.

ஆகவே அனைவரிடமும் அன்பு பாராட்டி கேட்கின்றோம். அனைவரும் ஒன்றுபட்டு ஒரே சிந்தனையுடன் தளராத முயற்சியுடன் நம்பிக்கையுடன் செயற்படுங்கள்.

தொடர்ந்து வரும் காலங்களில் அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சுபமங்களம்.

'சிவாகமகலாநிதி' சிவஸ்ரீ. கு.வை. க.வைத்தீஸ்வர குருக்கள்,
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.
தலைவர், அகில இலங்கை இந்து கலாச்சார பேரவை.

சிவஸ்ரீ. ச.சாந்தரூப குருக்கள்.
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.

தைத்திருநாள் சிறப்பிதழ்

# நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு விரைவில் சாத்தியமாக வேண்டும்!

## செஞ்சொற்செல்வர் பொங்கல் வாழ்த்தில் தெரிவிப்பு



தமிழர் திருநாள்களில் பொங்கல் பண்டிகை முக்கியமானது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனையும் உணவுக்கு உயிர்நாடியாக விளங்கும் உழவர் பெருமக்களையும் போற்றும் திருநாள் பொங்கல் திருநாள் ஆகும். இந்தத் திருநாளில் எமது நாட்டில் இனப்பிரச்சினைக்கான தீர்வு இந்த அரசால் விரைவில் சாத்தியப்பட வேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம் மற்றும் இலங்கை சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்கிழக்காசியா முழுவதும் தமிழர்கள் காலத்துக்குக் காலம் வாழ்ந்தார்கள். சமய நம்பிக்கையோடு தங்கள் பண்பாட்டைப் பேணினார்கள். ஆதிச் சமயமான சைவசமயம் இன்றுவரை பொங்கிப் படைக்கும் பண்பாட்டைப் பேணி வருகிறது.

பொங்கல் நாள் நித்தமும் வெளிச்சம்தரும் இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாளாக இன்றுவரை நாம் கருதுகின்றோம். இத்திருநாளில் அனைவரும் தம் இல்லங்களைப் புனிதப்படுத்தி தாம் வசிக்கும் வீட்டு வாயிலில் பொங்கிப் படைத்தல் வேண்டும். மூத்தோரை நாடி அவர்களின் பாதங்களைப் பணிந்து வணங்கி நல்லாசிகள் பெற வேண்டும். உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து அன்பின் வலிமையைப் பெருக்க வேண்டும்.

எங்கள் மண்ணில் கடந்த மாதம் 'டித்வா' புயலின் பாதிப்பு பலரை வருத்தியது. மகிழ்ச்சியாய் வாழ்ந்த மலையக மக்களுக்கு அதிர்ச்சியை தந்துவிட்டது. அப்பாவி உயிர்களைக் காப்பதற்குத் தம்மை அர்ப்பணித்து பலர் பணி செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலர் உதவிக்கரங்களை நீட்டியுள்ளனர். மனித நேயம் இன்னும் வற்றிப்போகவில்லை. எனவே மனிதர்களாகிய நாம் எல்லோரையும் நேசிக்க வேண்டும். இதைக் கற்றுக்கொடுப்பதற்கு இறைவன் சில அனர்த்தங்களை உருவாக்கி மனிதர்களைச் சிந்திக்க வைக்கிறான் போலும்.

எங்கள் நாட்டில் இன்னும் இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை. இந்த அரசு இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் எனப் பலரும் எதிர்பார்க்கிறார்கள். இது விரைவில் சாத்தியமாக வேண்டும். அதற்கு இறையருள் கைகூட வேண்டும் 'உண்மையான உறுதிமொழிகள் உறங்கக்கூடாது' சகல தமிழ் தலைவர்களும் யதார்த்த நிலையை உணர்ந்து ஒன்றுபட்டு ஒற்றுமையாக நல்ல தீர்வு காண வேண்டும். மக்கள், மக்கள் பிரதிநிதிகள் தொடர்பாக மனதை இழந்து தவிக்கிறார்கள்.

எனவே கோபங்களை வளர்க்காமல் நல்ல விடயங்களைச் சாதிப்பதற்கு ஒன்றுபட்டு உழையுங்கள். இளைய சமுதாயம் விழிப்படையுங்கள். 'பாடுபட்டு உழைப்பவர்க்கே நல்ல எதிர்காலம் உண்டு' என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அவப் பொழுதைத் தவிர்த்து ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ள காரியங்களைச் செய்ய முற்படுங்கள். பொங்கல் நாள் முதல் அனைவரும் புதிய மனிதர்களாக எம்மை நாம் ஆற்றுப்படுத்துவோம். அனைவருக்கும் இதய பூர்வமான பொங்கல் வாழ்த்தையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன். – என்றுள்ளது.



# தைத்திருநாள் சிறப்பிதழ்



# கருணையுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க வாய்ப்புக் கிடைக்கட்டும்!

## தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



பல இனங்கள், பல மதங்கள் மற்றும் பல மொழிகள் கொண்ட சமுதாயத்தின் இருப்பு உறுதிப்படுத்தப்படுவது, அந்தந்த இனங்களின் கலாசார அடையாளங்களை மதிக்க அனைவரும் காட்டும் அர்ப்பணிப்பின் அடிப்படையிலாகும். அதேபோல் அந்தந்த கலாசாரங்களின் மையக் கருத்துகளை சரியாகப் புரிந்துகொண்டு செயல்படுவதிலுமாகும் இந்து பக்தர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தைப்பொங்கல் விழா நமக்குச் சொல்லித் தரும் பாடத்தை நன்றாக அறிந்துகொண்டால், அது நமது வாழ்க்கையில் மிகப்பெரிய பயனாக இருக்கும்.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நன்றியுணர்வு பற்றி தைப்பொங்கல் விழா நமக்கு நினைவூட்டுவது, இயற்கைக்கு, உயிரினங்களுக்கு கூட நமது அன்பு, கருணை, மரியாதை செலுத்தப்பட வேண்டும் என்பதேயாகும். தற்போதைய உலகில் நாம் எதிர்கொண்டுள்ள இயற்கைப் பேரிடர்கள் மற்றும் மோதல்கள் அனைத்துக்கும் காரணம் இயற்கையும் மனித மனமும் கடுமையாக சிதைந்திருப்பதேயாகும். தைப்பொங்கல் கொண்டாட்டத்தில் நாம் நினைவில் கொள்ள வேண்டியதும் புரிந்துகொள்ள வேண்டியதும், அந்த விழாவின் பல்வேறு நிகழ்வுகளில் கொண்டாடப்படும் கலாசார அம்சங்களின் ஆழமான பொருளேயாகும்.

இந்தத் தருணத்தில் நமது பொறுப்பு, அந்த தூரநோக்கையும் தத்துவத்தையும் சமுதாயத்துக்கு வழங்குவதற்கான வழிகளை முடிந்த அளவு விரிவுபடுத்துவதாகும். பாடசாலைகள், அறநெறி பாடசாலைகள், விகாரைகள், கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் ஆகியவை அடிப்படையில் அந்தந்த மதத்தினருக்கு உரிய கலாசார மற்றும் மத நிகழ்வுகள் பற்றிய முறையான அறிவை வழங்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஒருவரையொருவர் மதித்து, கருணையுடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க நமக்கு வாய்ப்பு கிடைக்கும்.

தைப்பொங்கல் விழாவின் உண்மையான பொருளைப் புரிந்துகொண்டு, இந்த கலாசார விழாவைக் கொண்டாட அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கட்டும் என்று மனதாரப் பிரார்த்திக்கிறேன். – என்றுள்ளது.

---

# வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் உளம் கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துகள்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பொங்கல் வாழ்த்து



உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் தனித்துவமான பண்பாட்டுப் பெருவிழாவாகவும், உழவர் திருநாளாகவும் போற்றப்படும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு தைப் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயிரினங்கள் செழித்து வளர்வதற்குப் பெருந்துணை நின்ற சூரிய பகவானுக்கும், சேற்றில் கால் பதித்துச் சோற்றுப் பயிர் விளைவிக்கும் எமது உழவர் பெருமக்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக நின்ற கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் ஒரு உன்னதமான நாளாகவே இந்தத் திருநாள் அமைகின்றது.

இயற்கையோடுஇயைந்தவாழ்வியலைக்கொண்ட எமது மக்களின் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் ஒரு மிகச் சிறந்த அடையாளமே இந்தப் பொங்கல் திருநாளாகும்.

எமது வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், விவசாயமே எமது பொருளாதாரத்தின் மிக முக்கிய அடிநாதமாகத் திகழ்கின்றது. எமது மண்ணும், மக்களும் விவசாயத்துடன் பிரிக்க முடியாத பந்தத்தைக் கொண்டவர்கள். அந்த வகையில், இந்தப் பண்டிகையானது எமது மாகாணத்துக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பண்டிகையாகும்.

கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட ‘டித்வா’ சூறாவளிப் பேரழிவின் வடுக்களிலிருந்து எமது மக்கள் படிப்படியாக மீண்டெழுந்து வரும் ஒரு காலகட்டத்தில் இம்முறை நாம் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றோம். இயற்கையின் சீற்றத்தால் நாம் பாதிக்கப்பட்டிருந்தாலும், எமது மக்களின் மனங்களில் உள்ள நம்பிக்கையும், விடாமுயற்சியும் ஒருபோதும் குறையவில்லை.

புதிதாகப் பிறக்கின்ற இந்தத் தை மாதம், தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாக மட்டுமன்றி, எமது மக்கள் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களை நீக்கி, புதிய வழிகளைத் திறக்கும் ஒரு மாதமாகவும் அமைய வேண்டும். ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கமைய, சோதனைகளைக் கடந்து எமது விவசாயம் செழிப்பதற்கும், எமது மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கும் இத்திருநாள் வழிவகுக்கட்டும்.

புதிய அரிசியிட்டு, பால் பொங்கி, மகிழ்ச்சி பெருக்கெடுப்பதைப் போல, வடக்கு மாகாண மக்கள் அனைவரது வாழ்விலும் வளமும், நலமும், மகிழ்ச்சியும் பொங்கிப் பெருக வேண்டும் எனப் பிரார்த்தித்து, மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் எனது தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.– என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# அனைத்துத் தமிழ் உறவுகளுக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

## யாழ். மாநகர முதல்வர் மதிவதனி தெரிவிப்பு



தைப்பொங்கல் பண்டிகையைக் கொண் டாடும் இந்த நாளில், யாழ்ப்பாணம் மாநகர மக்கள், உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் உறவுகளுக்கும் எனது மனமார்ந்த தைத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூரியன், மண், மாடு மற்றும் உழவர்களை வணங்கி கொண்டாடும் இந்த இனிய திருநாள், நம் வாழ்க்கையில் செழிப்பையும், சந்தோஷத் தையும், நல்வாழ்வையும் தரும் பண்டிகை யாக அமையட்டும். இந்த பொங்கல் உங்கள் குடும்பத்தினர்களுக்கும், உறவினர்களுக்கும் நல்ல ஆரோக்கியம், அமைதி மற்றும் வளம் நிறைந்த ஆண்டாக அமைய மனதார வாழ்த்து வதோடு, மக்கள் அனைவரதும் எதிர்கால வாழ்வில் சகல எதிர்பார்ப்புகளும் நிறைவேறி சாந்தியும், சமாதானத்துடனும், சௌபாக்கியத் துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

யாழ். மாநகர முதல்வர் வி.மதிவதனி தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் மாநகரத்தின் முதல்வராக பொறுப்பேற்று சபையின் உறுப்பினர்கள் சகி தம் எதிர்கொள்ளும் இந்த முதலாவது தைத் திருநாளில் தற்போது அமையப் பெற்றுள்ள எமது சபையின் ஊடாக மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கி, சிறந்த சுத்தமான பசுமை மாநகரத்தை உருவாக்கும் எமது தூய முயற்சிகளுக்கு இறைவனின் துணை வேண்டி இன்றைய நன்னாளில் பிரார்த்திக்கின்றேன்.

சூரியனால் உயிர்வாழ்வதற்காகவும், விவசாயிகளின் அயராத முயற்சிகளுக்காக வும் நன்றி தெரிவிக்கும் தருணம் இது. எங்கள் பாரம்பரியங்களை ஊடுகடத்தும் வடிவிலும் இந்தத் தைப்பொங்கல் பண்டிகை சிறப்பானதாக அமைந்திருக்கின்றது. எங்கள் விவசாயிகளுக்கு நன்றிக்கடனாக, அவர்களைச் செல்வச்செழிப் போடு வாழவைப்பதற்கு இந்தத் தைப்பொங்கல் பண்டிகையில் நாங்கள் உறுதிபூணுவோம்.

பொங்கலின் மகிழ்ச்சி உங்கள் ஒவ்வொரு வீட்டையும், ஒவ்வொரு இதயத்தையும் மன நிறைவாலும் நிரப்பட்டும்.- என்றுள்ளது.

# செழிப்பான, ஒளிமயமான வாழ்வு எல்லோரது வாழ்விலும் அமையட்டும்

## பொங்கல் வாழ்த்தில் இலங்கை தமிழ் அரசுத் தலைவர் சீ.வீ.கே. தெரிவிப்பு



தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர் சமுதாயத்தில் மிக நீண்ட கால வழக்கில் உள்ள முதுமொழி. கடந்து வந்த காலத்தில் எதிர்கொண்ட இன்னல்கள், இடையூறுகள், கவலைகள் எல் லாம் நீங்கி சுபீட்சமான வாழ்வு அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் பிரதிபலிப்பே இந்த வாசகம் ஆகும். நம் எல்லோரது வாழ்விலும் செழிப்பான ஒளிமயமான வாழ்வு அமைய வேண்டும்.

இவ்வாறு தைத் திருநாள் வாழ்த்துச் செய்தி யில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வட மாகாணசபை அவைத்தலைவருமான சீ.வீ. கே.சிவஞானம் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

தைப்பொங்கல் என்பது தமிழினத்தின் தனித் துவமான கலாச்சார நிகழ்வாகும். பயிருக்கு உயிர் தந்த சூரியன், உழுது பயிரிட்ட விவசாயி, ஏர் இழுத்த எருது என பல்துறை சார்ந்த விவசாயப் பங் காளிகளுக்கு நன்றி நவிலும் நிகழ்வாகும். அதே நேரம் விவசாயியின் முயற்சிக்கான அறுவடையின் ஆரம்பத்தையும் இது குறிக்கும்.

உழவனுக்கு ஒரு நாளும், ஏர் இழுக்கும் எருதுக்கு இன்னொரு நாளும் ஒதுக்கிப் பொங்கல் செய்யப்படுகின்றது. எப்படி உழவன் நீராடி நிறை பொங்கல் செய்கிறானோ அதுபோல் எருதுக்கும் குளிப்பாட்டிச் சீர் செய்யும் சமத்துவ மனிதத்துவம் வேறு எங்கும் இல்லாத பெருமைக்கு உரிய கலாச்சார நிகழ்வாகும்.

நவீனத்தின் அடிப்படையில் ஓர் உழவு முறை அருகி, இயந்திர உழவு முறை உருவாகி விட்டாலும் கலாச்சார அடிப்படை மாறாமலே உலகெங்கிலும் தைப்பொங்கல் வியாபித்துள்ளமை தமிழினத் தின் சிறப்பு ஆகும். இது இந்துக்களின் நிகழ்வாக தோற்றப்பட்டாலும் ஒரு சமயம் கடந்த பொதுத் தமிழின நிகழ்வாகவே கொண்டாடப்படுகின்றது.

டியிற்றல் பொருளாதாரம் என்றெல்லாம் பேசப்படுகின்றது. காலமாற்றத்தில் அது தேவை யென்றாலும், மனிதனின் அடிப்படைத் தேவையான உணவுப் பொருள்கள் யாவும் நிலத்திலிருந்தே பெறப்படுகின்றது. விவசாயி இன்றேல் சமுகத்தை பசி உழற்றும். ஆகவே எம்மையெல்லாம் உயிர்ப்புடன் வாழ வைக்கும் விவசாயிக்கும் இன்னும் உழவு செய்யும் எருதுகளுக்கும் சூரியனுக்கும் நன்றி சொல்லி நம் எல்லோரது வாழ்விலும் செழிப்பான ஒளிமயமான வாழ்வு அமைய பிரார்த்திக்கிறோம்.- என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்





# மக்களின் உரிமைகளை வென்றெடுக்க இந்தத் திருநாளில் நாம் உறுதியேற்போம்!

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் பொங்கல் வாழ்த்தில் தெரிவிப்பு



“உயிர் காக்கும் இயற்கைக்கும், உணவளிக்கும் உழவுக்கும், வாழவைக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்”.

உலகுக்கு உணவளிக்கும் உழவர் பெருமக்களையும், இயற்கையையும் போற்றும் இத்திருநாளிலே, இலங்கை வாழ் அனைவருக்கும், உறவுகளுக்கு எனது இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த முறை தைப்பொங்கல் பண்டிகையை நாம் சவாலான ஒரு சூழலுக்கு மத்தியிலேயே கொண்டாடுகிறோம். அண்மையில் வீசிய ‘டித்வா’ புயல் எமது மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும், சோதனைகளைக் கண்டு துவண்டு விடாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித நிவாரணப் பணிகளை முன்னெடுத்து, அவர்களை மீட்டெடுப்பதில் நாம் முழு மூச்சுடன் செயல்பட்டுள்ளோம்.

“புயல் கடந்த பூமி, புதுப் பயிர் காணும்!” என்ற சொல்லின் படி எமது மக்களின் அசைக்க முடியாத தன்னம்பிக்கையே இந்தப் பாதிப்புகளிலிருந்து நாம் விரைவாக மீண்டு வர உதவியது.

பிறக்கின்ற இத்தைத்திருநாள், எமது மக்களின் வாழ்வில் ஒரு ‘மறுமலர்ச்சி யுகத்தின்’ ஆரம்பமாக அமைய வேண்டும். பழைய துயரங்களையும், கசப்பான நினைவுகளையும் கடந்து, “புதிய ஆண்டு – புதிய முயற்சி” என்ற உறுதியோடு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

மக்களின் உரிமைகளை வென்றெடுத்து, பாதுகாப்பை உறுதி செய்து பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஒரு பலமான சமூகமாக எம்மை மாற்றியமைக்க இந்தத் திருநாளில் நாம் உறுதியேற்போம்.

நம் அனைவருக்கும் மகிழ்ச்சியும், சுபீட்சமும், நிம்மதியும் பொங்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து, அனைவரது வாழ்விலும் வளமும், நலமும் செழுமையாய் பொங்கி வளமான நாட்டில் அழகான வாழ்க்கைக்கு வழி பிறக்க வாழ்த்துகின்றோம்.– என்றுள்ளது.

## தைத்திருநாள் சிறப்பிதழ்

# மக்களுக்கு சௌபாக்கியம் நிறைந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!

## ஜீவன் தொண்டமான் எம்.பி. பொங்கல் வாழ்த்து



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் அனைத்து மக்களுக்கும் சௌபாக்கியம் நிறைந்த இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தைப்பொங்கல் என்பது தமிழர்களால் உலகம் முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்படும் ஒரு உன்னதமான அறுவடைத் திருவிழாவாகும். இது “உழவர் திருநாள்” என்றும் அழைக்கப்படுகிறது.

தைப்பொங்கல் என்பது வெறும் பண்டிகை மட்டுமல்ல, அது நமது கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் இயற்கையைப் போற்றும் மனப்பான்மையின் அடையாளமாக விளங்குகிறது. உழவர்களைக் கௌரவித்து, இயற்கையை வணங்கும் இந்த நன்னாளில் நாம் ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் உதயமாகும் தைப் பொங்கல் பண்டிகை, மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் உள்ளது. மலையகப் பெருந் தோட்ட சமூகத்தின் உயர்வுக்காகவும், உரிமைக்காகவும் என்றும் குரல் கொடுத்துவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இடைவிடாது தமது பணியைத் தொடரும் என்பதை இந்தத் தைப்பொங்கல் நன்நாளில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பதற்கமைவாக, தைப்பொங்கல் பண்டிகை தமிழர்கள் பரந்து வாழும் இடங்கள் தோறும் கொண்டாடப்படுகிறது. அத்தோடு மலையகம் எங்கும் இத்தைப் பொங்கல் மங்களகரமாகத் திகழ வேண்டும். மலையகத்திலும் இந்த நாட்டின் தமிழர்கள் வாழும் அனைத்து பகுதிகளிலும் தென்னகப் பண்பாடு, கலாசார விழுமியங்களுக்கு அமைவாக இந்தப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவது மகிழ்ச்சியளிக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது கட்டுக்கோப்பை மேலும் பலப்படுத்தி, எமக்குரிய உரிமைகள் மற்றும் இதர வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த நன்னாளில் நாம் திடசங்கற்பம் எடுத்துக்கொள்வோம்.

இத்தருணத்தில் அனைத்து மக்களுக்கும் சௌபாக்கியம் நிறைந்த இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.- என்றுள்ளது.

# உரிமைகள் கோரும் உணர்வு பொங்கட்டும்!

## முன்னாள் எம்.பி. திலகராஜா பொங்கல் வாழ்த்து



“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” எனும் நன்றி உணர்வு மிக்கத் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலானது தமது வாழ்வுக்கான உரிமைகளைக் கோரும் உணர்வு பொங்கும் நாளாகவும் அமையட்டும்.

இவ்வாறு மலையக அரசியல் அரங்கத்தின் செயலதிபரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தனது தைப் பொங்கல் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் வாழ்வின் பாரம்பரிய நன்றியறிதல் பண்டிகையான தைப்பொங்கலானது தமது உழைப்பையும் தொழிலையும் வந்தனை செய்யும் மாண்பை எடுத்துச் சொல்கிறது.

அதேநேரம் கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட பேரனர்த்தம் உழைக்கும் மக்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளது.

தமது வீட்டு வாசலில் கோலமிட்டுச் சூரியனை வரவேற்க வேண்டிய மக்கள், தமது வாழ்விடங்களை இழந்து அல்லது விட்டு வெளியேறி தற்காலிக முகாம்களில் அலங்கோலமாக நிற்கும் நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது.

எனவே இந்த 2026 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கலானது உழைப்பையும் தொழிலையும் வந்தனை செய்யும் நன்றி அறிதல் நாளாக மட்டுமன்றி, மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பான வாழ்க்கையையும் கோரும் உரிமைக் கோரிக்கைகள் பொங்கும் நாளாகவும் அமையட்டும்.

தமது உழைப்பையே தம் இனத்தின் அடிப்படையாகக் கொண்ட இலங்கை மலையகத் தமிழர் வாழ்வில் இந்த உணர்வு இன்று இன்னும் மேம்பட்டு நிற்கிறது. அத்தகைய உரிமைக் கோரிக்கைகளை வென்றெடுக்க திடசங்கற்பம் கொள்ளும் தைப் பொங்கலாக இந்தத் தைப் பொங்கல் அமையட்டும்.- என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி பொங்க தைப்பொங்கலை வரவேற்போம்!

## இ.தொ.கா. தலைவர் ராமேஸ்வரன் பொங்கல் வாழ்த்து



உழவுத் தொழிலுக்கு காரணமாக இருக்கும் உழவர்களுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் காளைகளுக்கும், உலகுக்கு ஒளி கொடுக்கும் சூரிய பகவானுக்கும் நன்றி செலுத்தும் உன்னத தைப்பொங்கல் திருநாளில் மலையக மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கவும், அவர்கள் பெற்றுக் கொண்ட உரிமைகள் நிலைக்கவும் பண்டிகையை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

இ.தொ.கா. தலைவரும் நிதிச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இயற்கையில் கோரத் தாண்டவத்தில் மக்கள் பட்ட வேதனைகளையும், ஏற்பட்ட இழப்புகளையும் மறக்கவும் ஈடு செய்யவும் முடியாது. இத்தகைய சூழ்நிலையில் மலர்ந்துள்ள புத்தாண்டில் முதலாவது பண்டிகையை வரவேற்கிறோம்.

தமிழர் பண்பாட்டில் செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் பொங்கல் பண்டிகையில் வாசலில் கோலமிட்டு கரும்பு, தோரணம் கட்டி புதுப் பானையில் புத்தரிசி பொங்கலிட்டு சூரியனுக்கும், மாடுகளுக்கும் படைப்பதோடு உற்றார் உறவினர்கள், நண்பர்கள் சகிதம் மகிழ்ச்சியாகவும், நாம் கடந்த காலங்களில் எதிர்கொண்ட துன்பங்கள் நீங்கி, இன்பம் பெருகவும், மலையக மக்கள் மத்தியில் ஒற்றுமை நிலவவும் எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.- என்றுள்ளது.

# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

## நோர்வூட் பிரதேச சபைத் தவிசாளர் தைத்திருநாள் வாழ்த்து



தமிழர் வாழ்வின் பாரம்பரிய நன்றியறிதல் பண்டிகையான தைப்பொங்கலானது தமது உழைப்பையும் தொழிலையும் வந்தனை செய்யும் மாண்பை எடுத்துச் சொல்கிறது.

நோர்வூட் பிரதேச சபைத் தவிசாளர் கே.குழந்தைவேல் ரவி தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது வாழ்த்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் உழைக்கும் மக்களின் வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளது.

தமது வீட்டு வாசலில் கோலமிட்டு சூரியனை வரவேற்க வேண்டிய மக்கள், தமது வாழ்விடங்களை இழந்து அல்லது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தற்காலிக முகாம்களில் இருக்க வேண்டிய அவலத்தை உருவாக்கியுள்ளது.

எனவே இந்த 2026 ஆம் ஆண்டு தைப் பொங்கலானது உழைப்பையும் தொழிலையும் வந்தனை செய்யும் நன்றி செலுத்தும் நாளாக மட்டுமன்றி, மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பான வாழ்க்கையையும் கோரும் உரிமை பொங்கும் நாளாகவும் அமைய பிரார்த்திப்போம்.- என்றுள்ளது.



# தைப்பொங்கல்: உழைப்பின் அறுவடை அதுவே உணர்வுகளின் சங்கமமும் கூட!

உழவர் திருநாளாம் "தைப்பொங்கல்" தமிழர் பண்பாட்டின் மிக முக்கியமான திருவிழாவாகும். இது உழைப்பையும், இயற்கையையும், நன்றியுணர்வையும் போற்றும் ஓர் உன்னதத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழர் வாக்கு. உழவர்கள் தங்கள் கடின உழைப்பின் பயனாக விளைந்த நெல்லை அறுவடை செய்து, அதற்கு உதவிய இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் விதமாக இந்நாள் அமைகிறது. இது பெரும்பாலும் ஜனவரி மாதம் 14 அல்லது 15 ஆம் திகதிகளில் "சூரியன் மகர ராசிக்கு" நுழையும் நாளில் கொண்டாடப்படுகிறது. இது இந்தியாவிலே பொதுவாக நான்கு நாள்கள் கொண்டாடப்படுகின்ற ஒரு பண்டிகை ஆகும். போகிப்பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் போன்றன அவை. அதே போன்று இலங்கையிலும் தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் போன்றன வெகு விமர்சையாக கொண்டாடப்படுகின்றன. தமிழர்கள், குறிப்பாக விவசாய சமூகத்தில், இயற்கையை வணங்கும் உன்னதமான நாளாக இது பார்க்கப்படுகிறது.

தை மாதத்தின் முதல் நாள் பொங்கல் திருநாளாகும். அன்று அதிகாலையில் புதிய பானையில், புதிய அரிசியிட்டு, பால் மற்றும் வெல்லம் சேர்த்துப் பொங்கலிடுவர். பானையில் பொங்கல் பொங்கி வரும்போது "பொங்கலோ பொங்கல்!" என்று உற்சாகமாக முழக்கமிடுவர். "பொங்கல" என்றால் "விரிதல்" அல்லது "குமுறுதல்" என பொருள்படும். இது அதிர்வையற்ற மகிழ்ச்சி, நன்றி மற்றும் தியாகத்தின் அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில், சூரியனுக்கும், விவசாயத்திற்கும், மாடுகளுக்கும் மற்றும் இயற்கையிற்கும் நன்றி செலுத்தப்படுகின்றது.இது வாழ்வில் மகிழ்ச்சியும் வளமும் பொங்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

அதேபோன்று மாட்டுப் பொங்கல், உழவுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் நாள். மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வர்ணம் பூசி, மணி கட்டி அழகுபடுத்துவர். மாடுகளுக்குப் பொங்கல் மற்றும் பழங்களைக் கொடுத்து வழிபடுவர். இந்நாளில் இந்தியாவில் பல பகுதிகளில் "ஜல்லிக்கட்டு" எனப்படும் ஏறுதழுவுதல் வீர விளையாட்டு நடைபெறுகிறது.

பொங்கலின் சிறப்பம்சங்கள் பல.

மாவிலையானது மங்கலத்தின் அடையாளமாகப் பொங்கல் பானையில் கட்டப்படுகிறது.

கரும்பானது இனிமையான வாழ்வைக் குறிக்கும் பொங்கல் உணவின் ஒரு பகுதியாகும்.கோலமானது வீட்டின் வாசலில் அரிசி மாவால் இட்டு அழகூட்டுவது.

அதேபோன்று சூரிய வழிபாடு உணவளிக்கும் பயிர்கள் வளர ஒளியூட்டிய சூரிய பகவானுக்கு நன்றி கூறுதலை வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தைப்பொங்கலானது பண்பாட்டு முக்கியத்துவத்தைப் பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றது. தைப்பொங்கல் எந்தவித மத வேறுபாடும் இன்றி, தமிழர்கள் என்ற அடையாளத்துடன் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. இது வெறும் திருவிழா மட்டுமல்ல. உழைப்பைப் போற்றும் தத்துவம், இயற்கையைப் பாதுகாக்கும் உறுதிமொழி மற்றும் தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் கலாசார அடையாளம் ஆகும்.

இயற்கையோடு இணைந்து வாழும் தமிழர்களின் வாழ்வியலை உலகுக்கு எடுத்துக்காட்டும் திருவிழா தைப்பொங்கல். நவீன காலத்தில் நாம் எவ்வளவு முன்னேறினாலும், நமது வேர்களான விவசாயத்தையும், அதற்குத் துணையாக இருக்கும் இயற்கையையும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமையை இந்நாள் நமக்கு நினைவுபடுத்துகிறது. சமகாலங்களிலும் இன்றைய நகர வாழ்க்கையிலும், தைப்பொங்கல் தன் பிரதான தன்மையை இழக்கவில்லை. வீடுகள், நிறுவனங்கள், கடைகள் மற்றும் கல்வி நிலையங்களில் கூட இந்தப் பண்டிகை மகிழ்ச்சியுடன் அனுசரிக்கப்படுகிறது.

தைப்பொங்கல் என்பது வாழ்க்கைத் தொடரின் அத்தியாயம், இது நம் பண்பாட்டையும், நன்றி கூறும் மனப்பான்மையையும் பிரதிபலிக்கிறது. இயற்கையுடன் இணைந்து வாழும் தமிழர்களின் அடையாளமாக இது நிலைத்து நின்றுள்ளது. புதிய தொடக்கத்திற்கு வழிவகுக்கும் இப்பண்டிகை நம் வாழ்விலும் மனதிலும் ஒளிவீசும் ஒரு சூரியக் கதிராக இருக்கட்டும்!

**- பவதாரணி குலேந்திரநாதன் -**
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

- அப்துல் அஸீஸ் அஸ்மா -
(ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)



# மண்ணின் மணம் மாறாத நன்றியறிதல்

## ஒரு மாற்று மத மாணவியின் பார்வையில் தைப்பொங்கல் ஆய்வு

ஒரு மாற்று மதத்தைச் சேர்ந்த மாணவியாக, நான் வளரும் சூழலில் பலவிதமான பண்டிகைகளைக் கண்டிருக்கிறேன். ஆனால், தமிழர்களின் 'தைப்பொங்கல்' திருவிழாவை ஓர் ஊடகத்துறை மாணவியாக ஆய்வு செய்யும்போது, அது வெறும் மதச் சடங்குகளைத் தாண்டி, பிரபஞ்சத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான ஓர் உயரிய உறவைச் சொல்வதை உணர முடிகிறது.

பொதுவாக பண்டிகைகள் என்பது தெய்வங்களை மையப்படுத்தியதாகவே இருக்கும், ஆனால் தைப்பொங்கல் என்பது கண்ணெதிரே தெரியும் சூரியனுக்கும், நாம் வாழ வழிவகை செய்யும் மண்ணுக்கும், உழைப்பிற்கும் நன்றி கூறும் ஒரு 'மண்ணியல் சார்ந்த' பெருவிழாவாகத் திகழ்கிறது. இந்தத் திருநாளின் ஒவ்வொரு அசைவிலும் பொதிந்துள்ள தமிழர் பண்பாடு, இன்றைய நவீன சமூகத்தில் அது அடைந்துள்ள மாற்றம் மற்றும் அதன் உலகளாவிய தேவை ஆகியவற்றை ஒரு புதிய கோணத்தில் அணுக வேண்டியது அவசியமாகிறது.

தமிழர் பண்பாட்டில் தைப்பொங்கல் என்பது வெறும் ஒரு நாள் நிகழ்வல்ல; அது மார்கழி மாதத்தின் இறுதி நாளிலேயே தொடங்கிவிடுகிறது. 'போகி' என்று அழைக்கப்படும் அந்த நாளில், பழைய பொருள்களை எரிப்பது என்பது ஒரு குறியீடாகும். ஒரு மாற்று மதத்தவளாக நான் இதனைப் பார்க்கும்போது, இது புறத்தூய்மையை விட அகத்தூய்மைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமாகத் தோன்றுகிறது. மனதில் தேங்கியிருக்கும் கசப்புகளையும், எதிர்மறை எண்ணங்களையும் எரித்துவிட்டு, ஒரு புதிய தொடக்கத்திற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் உளவியல் ரீதியான சிகிச்சையாகவே போகி அமைகிறது. அன்றைய காலங்களில் வீட்டின் கூரைகளை வேய்ந்து, சுண்ணாம்பு அடித்து, வீட்டைத் தயார்படுத்தியது, ஆரோக்கியமான வாழ்விற்குத் தமிழர்கள் கொடுத்த முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

தைப்பொங்கலன்று அதிகாலையில் போடப்படும் மங்கலக் கோலங்கள் ஒரு மிகச்சிறந்த கலை வெளிப்பாடாகும். அரிசி மாவினால் கோலமிடுவது என்பது பறவைகளுக்கும் எறும்புகளுக்கும் உணவளிக்கும் ஒரு 'புண்ணிய காரியம்' என்பதை அறிந்தபோது நான் வியப்படைந்தேன். தர்மம் என்பது ஏதோ ஒரு பெரிய விஷயம் அல்ல, தன் வாசலில் இருக்கும் எறும்புக்கு ஒரு பிடி உணவிடுவதும் தர்மம்தான் என்ற தமிழரின் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' எனும் வாழ்வியல் அறம் இங்கே கோலங்களாக மிளிர்கிறது. இதனைத் தொடர்ந்து, முற்றத்தில் இடப்படும் அடுப்பும், அதன் மேல் வைக்கப்படும் புதிய மண்பானையும் இயற்கையின் ஐந்து கூறுகளையும் (நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்) ஒரு புள்ளியில் இணைக்கின்றன.

புத்தரிசியுடன் பால் சேர்த்து, அது பொங்கி வரும் வேளையில் எழுப்பப்படும் "பொங்கலோ பொங்கல்!" என்ற முழக்கம், உழைப்பின் வெற்றியைப் பிரகடனப்படுத்தும் ஒரு சங்கொலியாகும். ஒரு மாற்று மத மாணவியாக நான் கவனித்த ஒரு விஷயம் என்னவென்றால், இந்த வழிபாட்டில் சிலைகள் இல்லை, மறைவான மந்திரங்கள் இல்லை; மாறாக, உலகிற்கே ஒளியைத் தரும் சூரியனை நோக்கித் கைகூப்பித் தொழும் ஒரு வெளிப்படையான நன்றி நவிலல் மட்டுமே இருக்கிறது. இது எந்த ஒரு மதத்திற்கும் அப்பாற்பட்ட, உலகளாவிய 'இயற்கை வழிபாடு' (Naturalism) ஆகும். கரும்பு, மஞ்சள், இஞ்சி இலைகள் என அன்று பயன்படுத்தப்படும் அனைத்தும் மருத்துவக் குணங்கள் கொண்டவை என்பது தமிழர்களின் அறிவியல் சார்ந்த தேடலுக்குச் சான்றாகும்.

தொடர்ந்து வரும் 'மாட்டுப் பொங்கல்' என்பது தமிழர்களின் உன்னதமான மனிதாபிமானத்தைக் காட்டுகிறது. தான் விளைவித்த பயிரை அறுவடை செய்யத் துணையாக இருந்த காளைகளையும், பால் தந்து வாழ்வாதாரத்தைக் காத்த பசுக்களையும் தெய்வமாகப் போற்றுவது, மற்ற உயிர்களையும் சமமாக மதிக்கும் பண்பாட்டைக் காட்டுகிறது. இன்று மேலைநாடுகளில் 'விலங்குரிமை' (Animal Rights) பற்றிப் பேசுகிறார்கள்; ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனது உழைப்பிற்கு உதவிய விலங்குகளுக்குப் பூச்சூட்டி, பொங்கல் ஊட்டி மகிழ்ந்த தமிழினம், கருணையின் ஊற்றாகத் திகழ்கிறது. ஜல்லிக்கட்டு எனப்படும் ஏறுதழுவுதல்

தொடர்ச்சி▼



# மண்ணின் மணம் மாறாத நன்றியறிதல்

தொடர்ச்சி▲

வீரத்தின் அடையாளம் மட்டுமல்ல, அது அந்த இனத்தின் கால்நடைச் செல்வத்தைப் பாதுகாக்கும் ஒரு அறிவியல் பூர்வமான முறையுமாகும்.

அன்றைய பொங்கலுக்கும் இன்றைய நவீன சமூகம் கொண்டாடும் பொங்கலுக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளி இருப்பதை என்னால் உணர முடிகிறது. அன்றைய காலத்தில் பொங்கல் என்பது ஒரு கூட்டுழைப்பு (Community Celebration). ஊரே கூடி ஓர் இடத்தில் பொங்கல் வைப்பார்கள்; அங்கு சாதி, மத பேதங்கள் கடந்து மனித நேயம் தழைத் தோங்கும். ஆனால் இன்று, நகரமயமாக்கலால் நாம் அடுக்குமாடி குடியிருப்புகளுக்குள் சுருங்கி விட்டோம். முற்றத்தில் சூரியனுக்கு முன்னால் வைக்கப்பட்ட பொங்கல், இன்று சமையலறையில் மின்சார அடுப்பில் (Induction Stove) வைக்கப்படுகிறது. தொழில்நுட்பம் வளர்ந்தாலும், அந்த 'மண்ணின் வாசனை' மற்றும் 'உறவுகளின் நெருக்கம்' இன்று குறைந்து வருவதைக் காண முடிகிறது.

நவீன சமூகத்தில் பொங்கல் என்பது இன்று ஒரு 'டிஜிட்டல்' திருவிழாவாக மாறிவிட்டது. வாட்ஸ் அப் (WhatsApp) மற்றும் இன்ஸ்டாகிராம் (Instagram) வழியாக வாழ்த்துக்களைப் பகிர்வதோடு நமது கடமை முடிந்துவிடுவதாகப் பல இளைஞர்கள் கருதுகின்றனர். ஆனால், பொங்கலின் உண்மையான நோக்கம் 'விவசாயியைப் போற்றுதல்' என்பதாகும். இன்று நாம் உண்ணும் ஒவ்வொரு பருக்கை உண விற்கும் பின்னால் ஒரு விவசாயியின் கண்ணீரும் வேர்வையும் இருக்கிறது என்பதை இந்த நவீன சமூகம் மறந்துவிடக் கூடாது. ஓர் ஊடகத்துறை மாணவியாக, பொங்கலை வெறும் ஒரு விடுமுறை தினமாகப் பார்க்காமல், விவசாயிகளின் வாழ்வாதாரப் போராட்டங்களை உலகிற்கு எடுத்துச் சொல்லும் ஒரு தளமாக நாம் மாற்ற வேண்டும் என நான் கருதுகிறேன்.

முடிவாக, தைப்பொங்கல் என்பது தமிழர்களுக்கு மட்டுமேயான ஒரு திருவிழா அல்ல; அது உலக மக்கள் அனைவருக்கும் ஒரு பாடம். இயற்கை சீற்றங்களால் உலகம் அச்சுறுத்தப்படும் இந்த காலக் கட்டத்தில், இயற்கையை மதிப்பதும், அதற்கு நன்றி செலுத்துவதும் எவ்வளவு அவசியம் என்பதைப் பொங்கல் நமக்கு நினைவூட்டுகிறது. மாற்று மதத் தைச் சேர்ந்தவளாக இருந்தாலும், இந்தத் திருநாளில் பொதிந்துள்ள 'நன்றி உணர்தல்' (Gratitude) எனும் பண்பு என்னை மிகவும் ஈர்க்கிறது. மதம் கடந்த மனித நேயமும், இயற்கை மீதான காதலும் இருக்கும் வரை தைப்பொங்கல் தன் பொலிவை இழக்காது. வரப்போகும் தலைமுறையினருக்கு இந்த மண்பானை வாசனை மற்றும் கரும்பின் இனிப்புடன் சேர்த்து, நமது மூதாதையர்கள் கற்றுத் தந்த 'உயிர்களிடத்தில் அன்பு' எனும் தத்துவத்தையும் கடத்த வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.



# கட்டைக்காட்டு வன்முறைச் சம்பவத்தில் கைதான நால்வருக்கும் பிணை அனுமதி

(மரியசீலன் திலைக்ஸ்)

கட்டைக்காட்டில் இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட நால்வரையும் ஏழு நாள்களின் பின் நேற்று கிளிநொச்சி நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி கட்டைக்காடு கிழக்கு பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது வன்முறைக் கும்பல் ஒன்று கொடூரமான தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இதன்போது வீட்டில் நின்ற டிராக்டர், வீட்டின் உடமைகள், சி.சி.டி.வி. ஆகிய பொருர்கள் பலத்த சேதமடைந்திருந்தன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் நால்வர் கடந்த 6 ஆம் திகதி மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தமது சட்டத்தரணி ஊடாகச் சரணடைந்தனர்.

ஏழு நாள்கள் விளக்கமறியலின் பின் மீண்டும் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நால்வரையும் கடும் நிபந்தனையுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.












# கட்டாக்காலி கால்நடைகளுக்கு அபராதம் மன்னார் பிரதேச சபை எச்சரிக்கை விடுப்பு

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிரதேச சபை எல்லைக்குள் வீதிகளில் நடமாடும் கால்நடைகளுக்கு தண்டம் விதிப்பதற்கான நடவடிக்கையை மன்னார் பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பிரதான வீதிகளில் இரவு – பகல் என்று பாராது கட்டாக்காலி கால்நடைகள் குறுக்கு மறுக்காக திரிவதாலும் படுத்து உறங்குவதாலும் பாரிய விபத்துக்கள் எற்பட்டு வருகின்றன என நீண்டகாலமாக முறையீடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக தற்பொழுது மன்னார் பிரதேச சபை நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகின்றது.

இது சம்பந்தமாக மன்னார் பிரதேச சபை விடுத்திருக்கும் பொது அறிவித்தலில் மன்னார் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் உரிமையாளர்களின் பராமரிப்பு இன்றி ஆடுகள், மாடுகள் என்பன சுற்றித்திரிவதனால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகின்றது.

பலநேரங்களில் வீதிவிபத்துக்கள் ஏற்படுகின்றன. கால்நடைகளின் மலக்கழிவுகளினால் நகரப்பகுதிகளில் துர்நாற்றம் மற்றும் சுகாதார சீர்கேடான நிலையும் ஏற்படுகின்றன. இலையான்கள், கொசுக்கள் பெருக்கத்தினால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயமும் நகரத்தின் அழகும் பாதிக்கப்படுகின்றது எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே உடனடியாக செயற்படும் வண்ணம் உரிமையாளர்கள் தங்களது கால்நடைகளை பாதுகாப்பான முறையில் அடைத்து பராமரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

23.01.2026 ஆம் திகதிக்குப்பின்னர் வீதிகளில் கால்நடைகள் கட்டாக்காலியாக சுற்றித்திரியும் பட்சத்தில் அனைத்து கால்நடைகளும் மன்னார் பிரதேசசபையானது 1987ம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் உப பிரிவுகள் 66(1)- (3)- (4) மற்றும் 67 பிரிவின் கீழ் மறு அறிவித்தல் இன்றி கைப்பற்றும் என்பதுடன் தண்டப்பணமும் அறவிடப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்படும் கால்நடைகளுக்கு குற்றப்பணமாக நாளொன்றுக்கு மாடு ஒன்றுக்கு 2,000 ரூபாவும், ஆடு ஒன்றுக்கு 1,000 ரூபாவும், இவற்றை மீட்டுச் செல்லாவிடில் நாளாந்த தண்டனையாக மேலும் 500 ரூபாவுடன் ஒவ்வொருநாளும் நாளாந்தம் பராமரிப்பு செலவாக 500 ரூபாவும் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பட்ட காலத்தில் கால்நடைகளை மீட்காத பட்சத்தில் அவை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.








# மட்டு. ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு கதவடைப்பு

## சாணக்கியனின் கடுப்பால் அனுமதி வழங்கப்பட்டது

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சருமான சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், இளையதம்பி சிறிநாத், சிறிநேசன், கந்தசாமி பிரபு, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் போது, இந்தஜ் கூட்டத்திற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கூட்டத்தில் பங்கேற்க வந்த ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக, ஊடகவியலாளர்களுக்கு இறுதியில் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படை உயர் அதிகாரிகள், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், ஆணையாளர்கள், செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.









# எச்சரிக்கையை மீறி செயற்பட்ட சாரதி மீது கொலைக்குற்றச்சாட்டு

நாட்டில் டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தின் போது, அபாய எச்சரிக்கையையும் மீறி பாலத்தை கடக்க முயன்று இரு பயணிகளின் மரணத்திற்கு காரணமான பஸ் சாரதி மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட கடும் மழை காரணமாக நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் உட்பட 68 பயணிகளுடன் பயணித்த மேற்படி பஸ், பொலிஸாரின் கட்டளைகளையும் பொதுமக்களின் எச்சரிக்கையையும் மீறி, பெருக்கெடுத்து ஓடிய கலா ஓயா பாலத்தைக் கடக்க முயன்றது.

இந்த முயற்சியின் போது ஏற்பட்ட விபத்தில் இரண்டு பயணிகள் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் சாரதியான பலகொல்லகம, சாலியவெவ பகுதியைச் சேர்ந்த தனுஷ்க குமாரசிங்க என்பவர் சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நொச்சியாகம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவரை ஜனவரி 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வீதி விபத்துகளின் போது பொதுவாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலாக, இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் 296 மற்றும் 300 ஆகிய பிரிவுகளின் கீழ் கொலை மற்றும் கொலை முயற்சி ஆகிய குற்றச்சாட்டுகளை பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

சாரதி வேண்டுமென்றே பயணிகளின் உயிரைப் பணையத்தில் வைத்து பாலத்தைக் கடக்க முயன்றதால், இத்தகைய பாரதூரமான குற்றச்சாட்டுகள் அவசியமானவை என உதவி பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றில் தெரிவித்தார்.

உயிரிழப்பை ஏற்படுத்தும் நோக்கம் சாரதிக்கு இருக்கவில்லை எனவும், கொலைக்குற்றச்சாட்டு என்பது மிக அதிகப்படியானது எனவும் சட்டத்தரணிகள் வாதிட்டு பிணை கோரினர்.

இந்த நிலையில் குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெற முடியாது எனத் தெரிவித்த நீதவான், பிணை கோரிக்கையை நிராகரித்ததுடன், பிணை விண்ணப்பத்தை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தினார்.

# இறக்குமதி செய்யப்படும் பால் மா விலை குறையும்



இறக்குமதி செய்யப்படும் பால் மா ஒரு கிலோகிராம் விலையை 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 125 ரூபாவினால் குறைக்க பால் மா இறக்குமதியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

அதன்படி, 400 கிராம் பால் மா பாக்கெட்டின் விலையை 50 ரூபாவினால் குறைக்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என வர்த்தகம், வணிகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் பால் மா விலை குறைந்து வருவதால், அதன் பலனை நுகர்வோருக்கு வழங்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மீண்டும் பால் மா விலையை குறைக்க எதிர்பார்க்கிறோம் என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# பிரித்தானியாவில் இலங்கை பெண் கொலை: குற்றத்தை ஒப்புக்கொண்டார் இலங்கை நபர்

வேல்ஸ் தலைநகரான கார்டிஃபில் கடந்த ஆண்டு வீதியொன்றில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கைப் பெண்ணின் கொலை தொடர்பில், மற்றுமொரு இலங்கையர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு இடம்பெற்ற அதிர்ச்சியூட்டும் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இலங்கை நபர், நீதிமன்றில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

நிரோதா என அழைக்கப்படும் நிவுன் ஹெல்லகே டொனா நிரோதா கல்பனி நிவுன்ஹெல்ல 32 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டிருந்தார்.

2025 ஒகஸ்ட் 21 ஆம் திகதி அதிகாலை வேளையில், கார்டிஃபின் ரிவர்சைட் பகுதியில் உள்ள சவுத் மோர்கன் பிளேஸில் இரண்டு நிறுத்தப்பட்ட கார்களுக்கு இடையில் நிரோதா படுகாயங்களுடன் மீட்கப்பட்டார்.

அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையில், கூர்மையான ஆயுதத்தால் ஏற்படுத்தப்பட்ட பலத்த காயங்களே மரணத்திற்குத் தொடக்கக் காரணம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை நியூபோர்ட் கிரவுன் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது, 37 வயதுடைய திசர வேரகலகே தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

பென்ட்வின் பகுதியைச் சேர்ந்த இவர், ஆரம்பத்தில் இந்தக் கொலையை மறுத்திருந்தார். எனினும், பிந்திய விசாரணையில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், கூர்மையான ஆயுதத்தை வைத்திருந்த குற்றத்தையும் ஏற்றுக்கொண்டார்.

நிரோதாவின் மறைவுக்குப் பின்னர் அவரது குடும்பத்தினர் வெளியிட்ட அறிக்கையில், அவர் ஒரு "அன்பான மகள், குடும்ப உறுப்பினர் மற்றும் சிறந்த தோழி" என விவரித்துள்ளனர்.

அவரது கருணை மற்றும் அன்பான பண்பிற்காக அவர் என்றும் நினைவு கூரப்படுவார் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# மின்சாரக் கொள்கையால் பொதுமக்களுக்கு பாதிப்பு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய மின்சாரக் கொள்கையானது, சாதாரண நுகர்வோரையும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையினரையும் கடுமையாகப் பாதித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூக ஊடகப் பக்கத்தில் விடுத்துள்ள செய்தியில்,

வீதிமின்விளக்குகளுக்கானசெலவை நுகர்வோரிடமிருந்து வசூலிப்பது அநீதியானது என்றும் மக்கள் இதனைச் செலுத்த மறுத்தால், அது நாட்டின் பொலிஸ் சார்ந்த மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நேரத்தின் அடிப்படையில் ஒரு யூனிட்டிற்கு 67 ரூபா வீதம் அறவிடுவதற்கு எடுக்கப்படும் முயற்சி நியாயமற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

பகல் நேரத்தில் நுகர்வோர் பயன்படுத்தும் அளவைக் கொண்டு சூரிய சக்தி உற்பத்தியாளர்களுக்குக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் குறித்து மக்களிடம் கருத்து கேட்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைப்பதாகக் கூறிவிட்டு, தற்போது 11.57 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

அத்தோடு, அரசாங்கம் தனது பொய்ப் பிரசாரங்களை நிறுத்திவிட்டு, சொன்னபடி மின்சார விலையைக் குறைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

# இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மின்சாரக் கட்டண மாற்றம் இல்லை

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானம்

2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான மின்சாரக் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

2026 முதல் காலாண்டிற்கான கட்டணத் திருத்த முன்மொழிவை 2025 நவம்பர் 14 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு கடந்த அக்டோபர் மாதமே அறிவுறுத்தப்பட்டது.

எனினும், மின்சார சபை தனது முன்மொழிவை 2025 டிசம்பர் 29 ஆம் திகதியே சமர்ப்பித்தது. சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவில் தவறுகள் இருந்ததால், அவற்றைச் சீர்செய்து 2026 ஜனவரி 8 ஆம் திகதிக்குள் புதிய முன்மொழிவை வழங்குமாறு ஆணைக்குழு கோரியது.

ஆனாலும், திருத்தப்பட்ட முன்மொழிவைச் சமர்ப்பிக்கத் மேலும் தாமதமாகும் என ஜனவரி 8 ஆம் திகதி மின்சார சபை அறிவித்தது.

திருத்தப்பட்ட முன்மொழிவு இன்னும் கிடைக்காத நிலையில், அது கிடைத்த பின்னர் பொதுமக்களின் கருத்துக்கேட்பு மற்றும் மீளாய்வு போன்ற பணிகளை முடிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும். காலாண்டின் எஞ்சியிருக்கும் குறுகிய காலப்பகுதிக்காகக் கட்டணங்களை மாற்றியமைத்தால், சதவீத அடிப்படையில் கட்டணங்கள் பெருமளவு மாறுபடக் கூடும்.

இது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்பதால் தற்போதைய கட்டணத்தை மாற்றாமல் இருக்கத் தீர்மானிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவை 2026 பெப்ரவரி 13ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

# அனர்த்தத்தால் சேதமடைந்த 60 பாலங்களை புனரமைக்க இலங்கை வரும் சீன நிபுணர் குழு




டித்வா சூறாவளியால் சேதமடைந்த 60 பாலங்களை புனரமைப்பதற்கான சீன நிபுணர்கள் குழு இன்று இலங்கைக்கு வருகிறது.

இலங்கைக்கான சீன தூதுவர் குய் ஜென்ஹாங் இதை உறுதிப்படுத்தினார்.

புயலால் கடுமையாக சேதமடைந்த 60 பாலங்களை விரைவாக புனரமைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.





# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து அரசாங்கத்தைப் பற்றி முறையிடுவேன்

## மிஹிந்தலை தேரர் தெரிவிப்பு

அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள், குறிப்பாக கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விஹாராதிபதி வலவாஹெங்குணவெவே தம்மரதன தேரர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து, இலங்கை அரசாங்கம் நாட்டை எவ்வாறு சீரழிக்கிறது என்பதை நேரில் விளக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமக்கு தெரிந்த மாணவர் ஒருவர் ட்ரம்ப் குடும்பத்துடன் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பைப் பயன்படுத்தி, ஏற்கனவே இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த அமெரிக்க வரி ஒன்றைக் குறைக்க உதவியதாகத் தேரர் ஒரு தகவலை வெளியிட்டுள்ளார்.

# இராணுவத்தினரின் வியாபார நிலையத்தை மூடுவதற்கு பருத்தித்துறை நகரசபை பணிப்பு




பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் செயற்பட்டு வந்த இராணுவத்தினரின் வியாபார நிலையத்தை மூடுவதற்கு பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தை அண்மித்து அமைந்துள்ள இராணுவத்தின் இராணுவ முகமுடன் இணைந்த வகையில் பெயரில் கடை ஒன்று இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு கொத்துரொட்டி உள்ளிட்ட உணவுகளும், தேநீர், குளிர்பாணங்கள், சிகரட் உள்ளிட்டவை விற்பனை செய்யப்பட்டு வந்தன.

புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு அடிடையான இளைஞர்கள் அதிகளவில் இங்கு சென்று புகைப்பிடிப்பது வழக்கம்.

இவ்வாறான நிலையில் பருத்தித்தறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் உள்ளிட்ட குழுவினரால் நேற்று முன்தினம் மேற்படி இராணுவ விற்பனை நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வியாபார உரிமம் பெறப்படாது செயற்படுகின்றமை, நகரசபை தரப்பில்சுட்டிக்காட்டபட்டுஅதற்குஉரியநடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதுவரை தற்காலிகமாக மூடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இதையடுத்து உரிய அனுமதி பெற்று தொடர்ந்து நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்து, தற்காலிகமாக மூட இராணுவத்தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# பிரதமர் ஹரிணியை சந்தித்தார் ஜூலி சங்

இலங்கைக்கான தனது பதவிக் காலத்தை நிறைவு செய்யும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

இலங்கை - அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதில் ஜூலி சங் ஆற்றிய பங்களிப்பிற்கும், குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட “டித்வா” சூறாவளியின் போது அமெரிக்கா வழங்கிய உதவிகளுக்கும் பிரதமர் தமது நன்றியை தெரிவித்தார்.

கடந்த 2025 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட டித்வா சூறாவளியின் போது, அமெரிக்கா சுமார் 4 மில்லியன் அமெரிக்க டொலர் மனிதாபிமான உதவிகளையும், விமானப்படை மூலமான அவசர விநியோக சேவைகளையும் இலங்கைக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# பருத்தித்துறை நகரசபை தொழிலாளர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பருத்தித்துறை நகரசபை தொழிலாளர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறையைச் சேர்ந்த லண்டன் வாழ் சேனாதிராஜா தெய்வேந்திரனின் 70 ஆவது அகவையை முன்னிட்டு நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் ஊடாக இந்த உதவித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




பருத்தித்துறை நகரினை தூய்மையாக வைத்திருக்கும் நகரசபை தொழிலாளர்களுக்கு உதவுவதன் மூலம் தனது பிறந்த நாளை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் லோகநாயகி நலன்புரிச் சேவை ஊடாக 4000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

பருத்தித்துறை நகரசபையின் வேலைப்பகுதி ஊழியர்கள், சுகாதார தொழிலாளர்கள், சாரதி பணியாளர்கள் என 55 பேருக்கு 220,000 ரூபா பெறுமதியில் உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது பருத்தித்துறை நகரபிதா மற்றும் உப தவிசாளர் ஆகியோரும் இணைந்து உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்திருந்தனர்.











# உலகளாவிய விழாவாக மாறிய பொங்கல் புதுடில்லி நிகழ்வில் பிரதமர் மோடி உரை

பொங்கல் பண்டிகை ஒரு உலகளாவிய விழாவாக மாறிவிட்டது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள், நடிகர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டார்.

தமிழகத்தின் மிகுந்த உற்சாகத்துடன், நீண்ட நாள்கள் தொடர்ந்து கொண்டாடப்படும் பண்டிகையாக பொங்கல் பண்டிகை திகழ்கிறது. அனைத்து வீடுகளிலும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும், உறவினர்களும் ஒன்றிணைந்து, தமிழர்களின் பாரம்பரிய மரபுகளை நினைவுபடுத்தும் வகையில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில், மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் மீன்வளத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன், ஆண்டுதோறும் புதுதில்லியில் உள்ள தனது இல்லத்தில், தமிழர்களின் பாரம்பரியம் மாறாமல் பொங்கல் விழாவைக் கொண்டாடி வருகிறார். “ஒரே பாரதம் உன்னத பாரதம்” என்ற நோக்கத்தின் அடிப்படையில் நடைபெறும் இந்த விழாவில், முக்கியத் தலைவர்கள் கலந்துகொள்வது வழக்கம். அந்த வகையில், எல். முருகன் இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.

தமிழத்தின் பாரம்பரிய முறைப்படி, பானையில் பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டது. பானையில் பால் ஊற்றி பிரதமர் நரேந்திர மோடி வழிபட்டார். இதனையடுத்து, மாடுகளுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, உணவளித்த பிரதமர், கால்நடைகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பா.ஜ.க. தலைவர்களும் கலந்து கொண்டனர். நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன் உள்ளிட்ட பராசக்தி படக்குழுவினரும் இதில் பங்கேற்றனர். இந்தப் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி, “இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்” என்று தமிழில் கூறி உரையைத் தொடங்கினார்.

தொடர்ந்து பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“தமிழர் வாழ்வில் விவசாயிகளின் மகத்துவத்தையும், வேளாண்மையைப் போற்றுவதையும் வெளிப்படுத்தும் சிறப்பான பண்டிகை பொங்கல். வேளாண்மையை போற்றும் பண்டிகைதான் பொங்கல். பொங்கல் பண்டிகையை சர்வதேச திருவிழாவாகக் கொண்டாடுவது அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கிறது. தமிழ் மக்களுடன் பொங்கலைக் கொண்டாடுவதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

தமிழ் கலாசாரத்தில் உழவர்களே வாழ்வின் ஆதாரம் என்று போற்றப்படுகிறார்கள். தமிழர் வாழ்வில் விவசாயிகளின் மகத்துவத்தையும், வேளாண்மையைப் போற்றுவதையும் பிரதிபலிக்கும் பண்டிகைதான் பொங்கல். பொங்கல் இன்று ஒரு உலகளாவிய விழாவாக மாறியுள்ளது. தமிழர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆழமான தொடர்பை வெளிப்படுத்தும் திருக்குறள் இருந்துள்ளது.

இந்த சிறப்புமிக்க பண்டிகையை உங்கள் அனைவருடனும் கொண்டாடுவதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். நமது வாழ்வில் பொங்கல் ஒரு இனிமையான அனுபவம் போன்றது. இது நமக்கு உணவை வழங்கும் விவசாயிகளின் கடின உழைப்பை பிரதிபலிக்கிறது, பூமிக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கிறது. அதேநேரத்தில், இந்த திருவிழா இயற்கை, குடும்பம், சமூகம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்கான வழியை நமக்குக் காட்டுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படும் லோஹ்ரி, மகர சங்கராந்தி, மாக் பிஹு போன்ற பண்டிகைகளாலும் தற்போது நாட்டில் உற்சாகம் நிலவுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் வாழும் அனைத்து தமிழ் சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்று தெரிவித்தார். இந்த விழாவில், நாட்டியம், இசை உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# ‘ஜனநாயகன்’ மேல்முறையீட்டு மனு மீது உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணை

‘ஜனநாயகன்’ திரைப்படம் தொடர்பான மேல்முறையீட்டு மனு மீது உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணை இடம்பெறவுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய் நடித்துள்ள கடைசிப் படம் “ஜனநாயகன்”. கே.வி.என். நிறுவனம் தயாரிப்பில் ஹெச்.வினோத் இப்படத்தை இயக்கி உள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி உலகம் முழுவதும் இப்படத்தை வெளியிட திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க மறுத்த மத்திய தணிக்கை வாரியம், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பியது.

இதை எதிர்த்து படத் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குதொடரப்பட்டது. வழக்கைவிசாரித்த தனி நீதிபதி பி.டி.ஆஷா, ‘ஜனநாயகன்’ படத்தை மறு ஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்து செய்தார்.





இந்த உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியத்தின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா தலைமையிலான அமர்வு, தனி நீதிபதி தீர்ப்புக்கு தடை விதித்தது.

மேல்முறையீட்டு வழக்கை ஜனவரி 20 ஆம் திகதிக்கு தள்ளிவைத்த உயர் நீதிமன்றம், பதில் மனு தாக்கல் செய்ய தயாரிப்பு நிறுவனத்துக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து படத் தயாரிப்பு நிறுவனத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது.

# அமெரிக்காவிற்கு கிரீன்லாந்து அவசியம்: மீண்டும் வலியுறுத்தினார் டொனால்ட் ட்ரம்ப்




அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு கிரீன்லாந்து மிகவும் இன்றியமையாதது என்றும், தான் உருவாக்கி வரும் "கோல்டன்டோம்"பாதுகாப்புத்திட்டத்திற்கு இது மிகவும் முக்கியமானது என்றும் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள அவர், தாம் கட்டி எழுப்பி வரும் "கோல்டன் டோம்" பாதுகாப்பு அமைப்பிற்கு கிரீன்லாந்து நாட்டின் பங்களிப்பு மிக முக்கியமானது எனவும் குறிப்பிட்டள்ளார்.

மேலும், "நாம் கிரீன்லாந்தை எடுக்கா விட்டால், ரஷ்யாவோ அல்லது சீனாவோ அதனைக் கைப்பற்றிவிடும். அது ஒரு போதும் நடக்காது" என அவர் எச்சரித் துள்ளார்.

அமெரிக்காவின் பெரும் இராணுவ பலம் இன்றி நேட்டோ ஒரு பயனுள்ள சக்தியாக இருக்க முடியாது என்றும் கிரீன்லாந்து அமெரிக்காவின் கைகளில் இருக்கும்போது நேட்டோ இன்னும் வலிமையானதாக மாறும் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

இதனை விடக் குறைவான எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள ட்ரம்ப், தனது முதல் பதவிக்காலத்தில் கட்டியெழுப்பிய இராணுவ பலத்தை இப்போது அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டாரில் உள்ள தமது இராணுவத் தளத்திலிருந்து வீரர்களை வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவு



மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், கட்டாரில் உள்ள அமெரிக்காவின் மிகப்பெரிய இராணுவ தளத்திலிருந்து வீரர்கள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்டாரில் உள்ள அல்-உடைத் தளத்திலிருக்கும் சில அமெரிக்கப் பணியாளர்கள் நேற்று இரவே அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது மத்திய கிழக்கிலேயே அமெரிக்காவிற்குச் சொந்தமான மிகப்பெரிய இராணுவ தளமாகும்.

கடந்த ஆண்டு ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக, ஈரான் இந்தத் தளத்தின் மீது ஏற்கனவே தாக்குதல் நடத்தியிருந்தது.

இது குறித்து அமெரிக்கத் தூதரகம் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

வழக்கமாக தூதரகம் மௌனமாக இருந்தால், அது ஒரு ஒத்திகையாக இருக்க வாய்ப்பில்லை என இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

கடந்த ஜூன் மாதம் ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும், அமெரிக்கா இதேபோல அமைதியாகத் தனது வீரர்களை வெளியேற்றியது. தற்போது அதே போன்ற சூழல் நிலவுகிறது.

தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் இலக்குகளாக்கப்படும் என்று ஈரான் ஏற்கனவே எச்சரித்துள்ளது.

தற்போது வரை எந்தத் தாக்குதலும் நடக்கவில்லை என்றாலும், மிகப்பெரிய இராணுவ நகர்வுக்கான முன்னேற்பாடாக இது பார்க்கப்படுகிறது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஈரானின் வான்பரப்பு மீண்டும் மூடப்பட்டது; வன்முறையாளர்களுக்கு மரண தண்டனை



ஈரான் மீண்டும் தனது வான்பரப்பை மூடியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானில் தற்போது நேரடி ஆயுதப் பிரயோகங்கள் மற்றும் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், நேற்று இரவு மேற்கு ஈரானின் வான்பரப்பைத் தவிர்க்குமாறு சர்வதேசவிமானநிறுவனங்களுக்கு ஈரான் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வன்முறைப் போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு எதிராக விரைவாக விசாரணை நடத்தப்பட்டு, விரைவாக மரண தண்டனை விதிக்கப்படும் என்று ஈரானில் நீதித் துறை தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் தொடர் தடைகளால் ஈரான் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஈரான் நாணயத்தின் மதிப்பு கடுமையான சரிவைச் சந்தித்து வருகிறது. இதன் காரணமாகவும், அந்நாட்டு அரசின் தீவிர மதவாத அணுகுமுறை காரணமாகவும் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இதனால், உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் ஆட்சிக்கு எதிராக தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால், சட்டம் - ஒழுங்கு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களை ஒடுக்க பாதுகாப்புப் படைகளுக்கு அரசு உத்தரவிட்டுள்ளதை அடுத்து, பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2,400 இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் உயிரிழந்துள்ளனர். 18,000 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நேற்று சமூக ஆர்வலர்கள் கூறும்போது, "போராட்டங்களுக்கு எதிரான ஓடுக்குமுறை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,571 ஆக உயர்ந்துள்ளது. இதில், 2,403 பேர் போராட்டக்காரர்கள். 147 பேர் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள். போராட்டங்களில் பங்கேற்காத 9 பொதுமக்களும் 12 குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர். 18,100 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட நபர்களுக்கு எதிரான விசாரணை தீவிரப்படுத்தப்படும் என்று ஈரானின் நீதித் துறைத் தலைவர் குலாம்ஹொசைன் மொஹ்சேனி-எஜெய் தெரிவித்துள்ளார்.

ஈரானிய அரசு தொலைக்காட்சிக்கு அவர் அளித்த காணொலி சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது. அதில், "ஒருவர் மற்றொருவரை எரித்தாலோ, தலையை துண்டித்தாலோ, தீ வைத்துக் கொளுத்தினாலோ, நமது வேலையை நாம் விரைவாகச் செய்ய வேண்டும். நாம் ஒரு வேலையைச் செய்ய விரும்பினால், அதை இப்போதே செய்ய வேண்டும். நாம் ஏதாவது செய்ய விரும்பினால் அதை விரைவாகச் செய்ய வேண்டும். அது தாமதமானால், அதற்கு அதே விளைவு இருக்காது. நாம் ஏதாவது செய்ய விரும்பினால் அதை வேகமாகச் செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 15.01.2026




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுது போக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக வும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள்- 15.01.2026




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்கு வீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள்.இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகு முறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.



# கரையொதிங்கிய மியன்மார் தெப்பம்!

(அபு அலா)

திருகோணமலை – ஈச்சலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைத்தோட்ட கடற்கரைப் பகுதியில் நேற்று பௌத்த அடையாளங்களைக் கொண்ட தெப்பமொன்று கரை ஒதுங்கியுள்ளது.

இது மியன்மார் நாட்டிலிருந்து வந்திருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகின்றது. இத்தெப்பம் பௌத்த அடையாளங்களைக் கொண்டு காணப்படுகின்றது. பௌத்த பூஜை வழிபாடுகளின் பின் இது கடலில் விடப் பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணையை ஈச்சலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.